BULLETIN
OF THE
MADRAS GOVERNMENT MUSEUM

Compiled by Tmt. M. N. PUSHPA, Curator, for Botany

EDITED BY THE
COMMISSIONER OF MUSEUMS, MADRAS

Medicinal Plants used in the Siddha System of Medicine

Papers presented at the Seminar on "Medicinal Plants used in the
Siddha system of Medicine," organised by the Botany Section,
Government Museum, Madras on February 15th, 1996, in
connection with the Special Exhibition on "Siddha
Medicinal Plants" held at the Centenary
Exhibition Hall, Government Museum
from February 14th to 20th.

NEW SERIES : Natural History Section Vol. No. XII

©
GOVERNMENT OF TAMILNADU
1996

Printed at Government Museum Press, Madras-8

BULLETIN
OF THE
GOVERNMENT MUSEUM, CHENNAI

Compiled by Tmt. **M. N. PUSHPA,** Curator, for Botany

EDITED BY THE
COMMISSIONER OF MUSEUMS, CHENNAI

Medicinal Plants used in the Siddha System of Medicine

Papers presented at the Seminar on "Medicinal Plants used in the Siddha system of Medicine," organised by the Botany Section, Government Museum, Chennai on February 15th, 1996, in connection with the Special Exhibition on "Siddha Medicinal Plants" held at the Centenary Exhibition Hall, Government Museum from February 14th to 20th.

NEW SERIES : **Natural History Section Vol. No. XII**

©
GOVERNMENT OF TAMILNADU
1996

Printed at Government Museum Press, Chennai-8

பொருளடக்கம்

ப.எண்.

அணிந்துரைகள் I to VII

தாய் சேய் நலத்திற்கான மூலிகைகள் 1-3

மருத்துவர் கே. இராஜேஸ்வரி, எம். டி. (சித்தா)

சித்த மருத்துவர் 5-7

மருத்துவர் இரா. கண்ணன், திருச்சி

சித்த மருத்துவ மூலிகைகளைப் பற்றிய தற்கால அறிவியல் கருத்துக்கள் 8-12

மருத்துவர் கா. பழநிச்சாமி, பி. ஐ. எம்.

மூலிகை மருத்துவமே சிறந்தது 13-15

மருத்துவர் குன்றத்தூர் ராமமூர்த்தி

எய்ட்ஸ் நோய்க்கு மூலிகை மருத்துவம் 16-18

பேரா. புது. செயப்பிரகாசு நாராயணன், எம்.டி. (சித்தா)

செயலாளர் இம்ப்காப்ஸ்

காயகற்பம் 19-22

மருத்துவர் எம். லோகமணியன், எம்.டி. (சித்தா)

இல்லந்தோறும் இனிய மூலிகைகள் 23-24

மருத்துவர் அ. வாசுகிதேவி, பி.ஏ., பி.எஸ்.எம்.எஸ்.,

Medicinal usages of Plants and their significance 29-31

R. S. Azhakiamanavalan & K. Rajamani

Endangered Medicinal Plants 32-65

Dr. Hema Balram

Prof. & Head Dept. of Botany - Ethiraj College

Treatment of Psoriasis with Single Herb 66-67

Dr. J. R. Krishnamurthy

Member ICMR Committee.

Botanical aspects of Medicinal Plants 68-70

Dr. D. Narasimhan, Lecturer, M.C.C.

Siddha Medicinal Plants in the Display of Economic Botany Gallery 71-75

Tmt. M. N. Pushpa, Curator

Botany Section, Govt. Museum, Chennai-8.

Siddha Medicinal Plants 76-78

Dr. P. Sampath & G. Muthuraman

Presidency College

Scientific approach towards Herbs 79

Dr. E. Sukumar, C.R.I.

Teaching Medicinal Plants 80-81

Dr. T. Thirunarayanan, Siddha Medical College.

Known Medicinal Plants and their unknown uses 82-93

Dr. S. Usman Ali, Head-Pharmacognosy,

Central Research Institute, (SID)

Concluding Remarks 94

Dr. J. R. Krishnamurthy.

Member ICMR Committee

முனைவர் மு. தமிழ்க்குடிமகன்,
எம்.ஏ., பிஎச்.டி.
தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத்
துறை அமைச்சர்

தமிழ்நாடு அரசு

தலைமைச் செயலகம்
சென்னை - 600 009
நாள் 12-6-96

அணிந்துரை

இந்தியாவிலேயே, தொன்மையானதும் பழமையானதுமாக விளங்கும், சென்னை அரசு அருங்காட்சியகம், பன்னோக்கு அருங்காட்சியகமாகவும் திகழ்கிறது. சென்னை நகரின் மையமாகத் திகழும் இந்த அருங்காட்சியகத்தினை நாள்தோறும் நூற்றுக்கணக்கான பார்வையாளர்களும், மாணாக்கரும், ஆய்வாளர்களும் கண்டு பயனடைந்து வருகின்றனர். அருங்காட்சியகத்தின் ஒரு முக்கிய பிரிவாகத் திகழும் பயிரியற் பிரிவில் இவ்வாண்டு பிப்ருவரி மாதத்தில் நடைபெற்ற சித்த மருத்துவக் கண்காட்சி மற்றும் கருத்தரங்கின் விளைவாக முகிழ்ந்ததே 'சித்தமருத்துவத் தாவரங்களின் பயன்பாடு' எனும் இந்நூலாகும்.

ஏறத்தாழ எழுபது சித்தமருத்துவப் பயிரினங்களைக் காட்சிக்கு வைத்துள்ள, பயிரியற் பிரிவில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் படைக்கப்பட்ட கட்டுரைகளை நூல் வடிவில் வெளியிடுவதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். இந்நூலை வெளியிடுவதில் முனைப்புடன் பங்காற்றிய அருங்காட்சியக ஆணையர் திரு.க.தீனதயாளன், இ.ஆ.ப அவர்களுக்கு எனது மனங்கனிந்த பாராட்டு உரித்ததாகும். பல்வேறு கல்லூரிகளையும், பல்கலைக் கழகங்களையும் ஒருங்கிணைத்து, கருத்தரங்குப் பணிகளை செவ்வனே முடித்த பயிரியற் பிரிவுக் காப்பாட்சியர் திருமதி.ம.ந.புஷ்பாவின் பணியினையும் வாழ்த்துகிறேன்.

12-6-96

முனைவர் மு. தமிழ்க்குடிமகன்,
தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ் பண்பாட்டுத்
துறை அமைச்சர்.

DR. M.THAMIZHKUDIMAGAN,
M.A., Ph.D.
MINISTER FOR TAMIL OFFICIAL
LANGUAGE AND TAMIL CULTURE

GOVERNMENT OF TAMIL NADU

SECRETARIAT
MADRAS - 600 009
Dated. 12.6.96

FOREWORD

I am happy to state that Government Museum, Madras, is one of the oldest and second largest Museum in India. Moreover, it is a multi-purpose Museum, serving the needs of the public, students, scholars and dignitaries at large situated in the heart of the city, attracting large number of people to its various faculties.

It is a good sign of development that Madras Museum is gaining its momentum with its multifarious activities. One amongst, this is the Siddha Medical Exhibition and a Seminar conducted by the Botany Department of this Museum. I am very happy in the release of this book on "Medicinal Plants used in the Siddha System of Medicine". I congratulate, the Commissioner of Museums Thiru K.Dheenadhayalan, I.A.S., for having taken effort in publishing this Book . I also congratulate the Botany Curator, Tmt.M.N.Pushpa, for having good rapport with various educational institutions by which the seminar was lively, and educative.

Dr.M.THAMIZHKUDIMAGAN,
MINISTER FOR TAMIL OFFICIAL
LANGUAGE AND TAMIL CULTURE.

முகவுரை

சென்னை அரசு அருங்காட்சியகம் தன்னுடைய சேகரிப்புகளுக்கு மிகவும் பிரசித்தி பெற்ற ஒன்றாகும். தற்போது அரசு அருங்காட்சியகமானது தமிழ்நாட்டின் 12 மாவட்டங்களில் விரிவுபடுத்தப்பட்டுள்ளன. சென்னை அரசு அருங்காட்சியகம் சிறப்புக் கண்காட்சிகள், கருத்தரங்குகள், சொற்பொழிவுகள் போன்றவற்றை சிறப்பாக நடத்தி பெரும்புகழ் பெற்று விளங்குகின்றது. இதில் அரசு அருங்காட்சியகத்தின் தாவரவியற் பிரிவு நடத்திய ‘சித்த மருத்துவ சிறப்புக் கண்காட்சி’ கருத்தரங்கு மற்றும் சித்த மருத்துவத்தைப் பற்றிய சிறப்புச் சொற்பொழிவுகள் ஆகியவை குறிப்பிடத் தக்கவைகளாகும். சித்த மருத்துவம் பற்றிய கருத்தரங்கு சொற்பொழிவுகளை நூலாக தொகுத்து அருங்காட்சியக வெளியீடாக வெளிகொணர்வதில் நான் பெருமகிழ்வடைகிறேன். இந்த நூலானது மாணவர்கள், அறிஞர்கள் ஆகியோருக்கு பயன்படுவதோடு மட்டுமல்லாமல் பொதுமக்களுக்கும் பயனளிக்கும் வகையில் அமைந்துள்ளது என்பதை இங்கு குறிப்பிடுவதில் உவகையடைகிறேன்.

சென்னை-8
7-6-96.

திரு. வை. பழனிச்சாமி, இ.ஆ.ப.
செயலர், தமிழ் வளர்ச்சி மற்றும் பண்பாட்டுத்துறை

FOREWORD

Government Museum, Madras, which is well renowned for its collections has expanded its faculty in twelve other Districts of Tamil Nadu. It is gaining fame by its extensive activities like holding of Special Exhibitions, Lectures and Seminars. Worth mentioning, is the Special Exhibition and Seminar on "Medicinal Plants used in the Siddha System of Medicine" conducted by the Botany Section of this Museum. I am happy that the Seminar papers are brought out in the form of a book as Museum publication, which would be of immense use not only to the students and scholars but even ordinary persons.

V. PALANICHAMY, I.A.S.,
Secretary,
Tamil Development and Culture Department

அணிந்துரை

1828 ஆம் ஆண்டில் சென்னை லிட்டரரி சொசைட்டி மற்றும் இலண்டன் ஆசிய சொசைட்டியும் இணைந்து சென்னையில் பொருளாதார புவியியல் அருங்காட்சியகத்தை துவக்கினர். சுமார் 1,100 புவியியல் சேகரிப்புக்களுடன், 1851ஆம் ஆண்டு சென்னை அருங்காட்சியகம், பொதுமக்கள் காணும் வகையில் அமைக்கப்பட்டது. சென்னையிலுள்ள அரசு அருங்காட்சியகம், இந்தியாவின் தொன்மையான அருங்காட்சியகங்களுள் இரண்டாவது இடத்தை வகிக்கின்றது. 1951 ஆம் ஆண்டு இந்த பல்நோக்கு அருங்காட்சியகம் தனது நூற்றாண்டு நிறைவு விழாவினைக் கொண்டாடியது. இதன் முதல் கௌரவ அதிகாரியாக சர்ஜன் எட்வர்ட் கிரீன் பால்ஃபர் பொறுப்பேற்றார்.

இத்தகு சிறப்புமிகு அருங்காட்சியகத்தின் ஓர் பிரிவாக அமைந்துள்ளது, தாவரவியற் பிரிவு. இது வகைபாட்டுத் தாவரவியல் மற்றும் பொருளாதாரத் தாவரவியல் எனும் இருகூடங்களில் பொதுமக்கள் கண்டுகளிக்க இரண்டாவதுமாடியில் அமைக்கப்பட்டுள்ளது. இப் பிரிவின் சிறப்புத் தன்மை உலர்தாவர சேகரிப்புகளே. இது 1873–74-ம் ஆண்டிலிருந்தே, கர்னல் பெட்டோம்ஸ் போன்ற அறிஞர்களின் தனி சேகரிப்பினால், புகழ் பெற்றது. இச்சேகரிப்புகள் தாவரவியலாளரின் ஆய்வுப் பணியில் பெரிதும் உதவியது.

இப்பிரிவின் முதல் பட்டியல் தொகுப்பு 1919 ஆம் ஆண்டு இப்பிரிவுக் காப்பாட்சியர் திரு. எஸ். என். சந்திரசேகர் அவர்களால் வெளியிடப்பட்டது. அண்மையில், மறைந்த தாவரவியலாளர் திரு, பி. வி. மயூர்நாதன் அவர்களின் "சென்னை மற்றும் அதனைச் சுற்றியுள்ள இடங்களில் உள்ள பூக்கும் தாவரங்களின்" திருத்தப்பட்ட வெளியீடு (1994 ஆம் ஆண்டு) கொண்டுவரப்பட்டது.

தாவரவியற் பிரிவின் பல்வேறு சிறப்புக் கண்காட்சிகளுள் குறிப்பிடத்தக்கது இவ்வருடம் பிப்ருவரி 14 முதல் 20 வரை நடைபெற்ற சித்த மருத்துவ கண்காட்சி கருத்தரங்கு, இலவச சித்த மருத்துவ முகாம் மற்றும் சிறப்புச் சொற்பொழிவுகளாகும், இதில் இப்பிரிவு காப்பாட்சியர் திருமதி ம. ந. புஷ்பா எழுதிய "மருத்துவத் தாவரங்களின் குறிப்பேடு' ஒன்று வெளியிடப்பட்டது. இக்கண்காட்சியில் அருங்காட்சிய உலர் தாவர சேகரிப்புகள் ஐம்பது, டாக்டர் குன்றத்தூர் இராமமூர்த்தியின் மூலிகைச் செடிகள் நூற்று ஐம்பது, திருச்சி சித்த மருத்துவர் கண்ணன் அவர்களின் மூலிகை மூலப் பொருட்கள், சித்த மருத்துவக் கல்லூரி உலர் தாவரங்கள் ஆகியவை காட்சியில் வைக்கப்பட்டன. கருத்தரங்கில், பதினான்கு பேர் கலந்துகொண்டு மூலிகை மருந்துகளைப் பற்றி பேசினர். இவையனைத்தையும் ஒருங்கிணைத்து இதனை நூல் வடிவில் பொது மக்கள் தோய்ந்துணர இங்கு அளித்துள்ளோம். இந்நூல் பொதுமக்களிடம், சித்த மருத்துவத்தைப் பற்றிய ஒரு விழிப்புணர்ச்சியையும் மற்றும் அவைகளின் மருத்துவப் பயன்களையும் மருந்து வகைகள் ஆகியவற்றையும் அருங்காட்சியக வெளியீட்டு வழியே தெரிவிக்க ஏற்றதொரு கருவியாக இருக்கும் என்பதில் ஐயம் ஏதுமில்லை.

கண். தீனதயாளன் இ. ஆ. ப.
ஆணையர், அரசு அருங்காட்சியகங்கள்

PREFACE

SEMINAR ON MEDICINAL PLANTS USED IN THE SIDDHA SYSTEM OF MEDICINE

The real beginning of the Museum was in 1851, with Surgeon Edward Green Balfour as its organizer. The Madras Museum is the second in India from the point of age and the first Museum in Independent India to stage a Centenary Celebratiion which took place in the year 1951.

As a part of this Museum, the Botany Section started enriching its collections, with Liuetenant Colonel Beddorme's collection (1873 - 79) which had many rare plants. Forest produce were added to its collections in 1878. Thus the Madras Museum Herbarium became famous and well known at Kew gardens. Till now, this Section has been enriching its collections, which are kept on display in two galleries namely, Systematic Botany Gallery and Economic Botany Gallery (including reserve collections) situated in the Second floor of the main building.

Plants are closely linked with man's life and not a day passes when man does not use plant or its produce for some purpose or the other. To emphasize this, the section has been conducting periodical special exhibitions, seminars and special lectures.

The most significant of this, is that for the first time a Special Exhibition, Seminar, Special lecture and a free medical camp on 'Siddha Medicinal Plants and their usage' were conducted from February 14th to 20th February this year as part of activities of the Botany Section of this Museum. This book is the outcome of the enthusiastic scholars who took part in the Seminar and presented papers.

This Bulletin is brought out as part of Museum publication, for the benefit of the scholars, students and public at large and to awake an interest among them to the study, to know their uses and benefits of the Siddha medicinal plants inTamilnadu.

Thiru K. Dheenadhayalan, I. A. S.,
Commissioner of Museums.

****

அறிமுகவுரை

சித்த மருத்துவத் தாவரங்கள் மற்றும் சித்த மருத்துவ கருத்தரங்கு கடந்த பிப்ருவரி 15, அரசு அருங்காட்சியக நூற்றாண்டுக் கண்காட்சிக் கூடம் மற்றும் கலையரங்கில் முன்னாள் ஆணையர் திரு. நரேஷ் குப்தா, இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் நடைப்பெற்றது. இந்த கருத்தரங்கின் முற்பகுதியில் மருத்துவர் கமலி ஸ்ரீபால் மற்றும் முனைவர் ஹையத் (B.S.I. கோயம்புத்தூர்) தலைமையேற்றனர். காலை மற்றும் மாலைக் கருத்தரங்கில் மருத்துவர்கள், பேராசிரியர்கள் மற்றும் ஆய்வாளர்கள் உள்ளிட்ட பதினான்கு பேர் பங்கேற்றனர். பிற்பகுதி Dr. J.R. கிருஷ்ண மூர்த்தி ICMR Committee Expert group on AIDS, அவர்கள் தலைமையில் நடைபெற்று இனிதே முடிந்தது.

‘சித்த மருத்துவத் தாவரங்கள்’ கருத்தரங்கு நூலினை வெளியிட என்னை ஊக்குவித்த ஆணையர் திரு. கண். தீனதயாளன் இ. ஆ. ப. அவர்களுக்கு எனது முதற்கண் நன்றியினை சமர்ப்பிக்கிறேன். நூல் வெளியீட்டில் தக்க வழிகாட்டிய துணை இயக்குநர் முனைவர் நே. தேவசகாயம் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியினை தெரிவிக்கிறேன். மேலும் நன்முறையில் இவ்வெளியீட்டினை கொணர உதவிய, வரைவு மற்றும் வடிவமைப்புக் காப்பாட்சியர் திரு. அசோகன், திரு. இராஜேந்திரன் (DTP உதவியாளர்) மற்றும் அச்சகப்பிரிவினருக்கும் இதர அலுவலர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

15-6-96
சென்னை.

ம. ந. புஷ்பா
காப்பாட்சியர், தாவரவியற்பிரிவு

தாய் சேய் நலத்திற்கான மூலிகைகள்

Dr. K. Rajeswari M.D. (Siddha) Professor,
Govt. Siddha Medical College, Madras - 106

நம் நாட்டில் ஏறத்தாழ 7500 மருத்துவ மூலிகைகள் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இவற்றில் குறிப்பிட்ட சில மூலிகைகளே தாய், சேய் மருத்துவத்தில் பயன்படுத்தப்படுகிறது. பாரம்பரிய சித்த மருத்துவத்தின் குழந்தை மருத்துவம் என்பது ஒரு சிறப்பு பிரிவாகவே அமைந்திருக்கிறது. குழந்தைகளுக்கு வரக்கூடிய நோய்களுக்குப் பெரும்பாலும் தாய், தந்தையரே காரணம் என்று கூறப்படுகின்றது. தாய்க்கும், சேய்க்கும் வரக்கூடிய நோய்களுக்கு பல்வேறுபட்ட மூலிகைகளை பல்வேறுபட்ட வகைகளில் சிறப்பாக பயன்படுத்தி வருகின்றனர். இவை தமிழகத்தில் எளிதாகக் கிடைக்கக் கூடிய பாதுகாப்பான மூலிகைகள் ஆகும். இம்மூலிகைகள் தூதுவளை, பூண்டு, ஆடாதோடை, வசம்பு, அரத்தை, துளசி உத்தாமணி, வல்லாரை, ஓமம், கற்பூரவல்லி ஆகும். இக்கட்டுரையில் இம் மூலிகைகளை எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதைக் காணலாம்.

1. தூதுவளை

Solanum trilobatum - Family Solanaceae இதில் Solasodine என்ற Steroidal alkoloid உள்ளது. அத்துடன் Ca, 334 Units, P 52 Units, Fe. 5 mg/100 gm உள்ளது. இதற்கு சளி, இருமல், டி.பி., ஆஸ்துமா, தொண்டையில் சதை வளர்ச்சி, புற்று நோய் இவற்றை நீக்கும் குணம் உண்டு. தூதுவளை இலையில் சிறுசிறு முட்கள் உண்டு. முட்களை நீக்கி விட்டு எண்ணெய் விட்டு வதக்கி, துவையல், குழம்பு செய்து சாப்பிடலாம். காயை சுண்டை வத்தல் போல் செய்து சாப்பிடலாம். குழந்தைகளுக்கு உண்டாகும் காதுவலிக்கு 2 துளி இலைச்சாற்றை காதில் விட வலி நீங்கம். சமையலில் பயன்படுத்த முடியாதவர்கள், தூதுவளை நெய், தூதுவளை லேகியம் கடையில் கிடைக்கும். வாங்கி பயன்படுத்தலாம்.

2. பூண்டு

Allium, sativum, Garlic, Liliaceae இதற்கு நம் உடலுக்கு தேவையான, அலோக சத்துப் பொருள்கள் இதில் அடங்கியுள்ளது. அவை Ca, P. Fe. thiamine, riboflavin Vit. C, folic acid, Iodine, Amino acid, Methionine, eystine உள்ளது. Anti-tuberulous, anti-Amoebic action உள்ளது. Epilepsyஐதடுக்கும். Blood Sugar levelஐ குறைக்கும். Cancer Cell developmentஐ தடுக்கிறது.

பூண்டு பாலூட்டும் தாய்க்கும் அருமையான மருந்தாகும். பாலூட்டும் காலத்தில் ஏற்படும் சத்துக்குறைவை பூண்டு ஈடு செய்யும் வகையில் இதில் முக்கியமான வைட்டமின்கள் உள்ளன. தாய் வலிமை குறைந்த நிலையில் இருக்கும்போது எளிதில் (டி.பி. போன்ற) நோய்கள் வராமல் தடுக்க நோய் எதிர்ப்பு சக்தியைக் கொடுக்கும். Vit. C உள்ளது. பூண்டை சமையலில் அதிகமாகப் பயன்படுத்தலாம். குழந்தை பெற்ற தாயக்கு பூண்டுப்பால் கஞ்சிக் கொடுக்கலாம். குழந்தைகளுக்கு உண்டாகும் உள் நாக்கு வளர்ச்சிக்கு பூண்டை சாறு எடுத்து அத்துடன் சம அளவு தேன் சேர்த்து தொண்டையில் தடவி வர நீங்கும். காதுவலிக்கு பூண்டை நல்லெண்ணை விட்டுக் காய்ச்சி 2 துளி காதில்விட வலி நீங்கும். வயிறு வாயு தொந்தரவினால் ஊதிக் கொண்டிருந்தால், 2 பல் பூண்டை அடுப்பிலிட்டு சுட்டு சாப்பிட உடனே குணமாகும். சீதக் கழிச்சலுக்கு பூண்டை வேக வைத்து நெய், சர்க்கரை சேர்த்து சாப்பிட இரண்டே வேளையில் நிற்கும்.

3. துளசி

Ocimum Sanctum - Family Labiatae.

The essential oil possess anti bacterial and insecticidal properties உள்ளது.If the growth of Microbacterium tuerculosis and Micrococcuss pyogenes. It has one tenth the potency of Streptomycin fourth that of Isoniazid.

இதற்கு Salmonella typhosa-Malaria இவற்றை நீக்கும் குணம் உள்ளது. கடித்த இடத்திலும், மேனி கடித்த இடத்திலும் கருந்துளசி இலையை கசக்கித் தேய்க்கக் வலி நிற்கும். குழந்தைகளுக்கு உண்டாகும், சுரம், இருமல், சளி இவைகளை நீக்க துளசியிலைச் சாறு 1 டீஸ்பூன் உடன் தேன் கலந்து கொடுக்க நீங்கும். கருந்துளசி இலையை நீர்விட்டு காய்ச்சி ஆவி பிடிக்க குழந்தைகளுக்கு உண்டாகும் நீரேற்றம், மூக்கில் நீர் வடிதல் நீங்கும். பெருமாள் கோயிலில் துளசி கொடுப்பது மேற்கண்ட நோய் வராமல் தடுப்பதற்கு ஆகும். கொசு வராமல் தடுக்கும் சக்தியும் துளசிக்கு உண்டு.

4. வசம்பு

Acorus calamus - Family-Araceae.Volatile essential oil, acorin, acorefin, catamine, starch, Mucilage, tannin உள்ளது. Asarone, B-asarone enhance anaesthatic actvitity of pentobarbitone, hexobarbitone Hypnotic tranquilising activity உள்ளது.

வசம்பிற்கு பெயரே பிள்ளை மருந்தாகும். குழந்தை வயிற்று வலியினால் விடாமல் அழுது கொண்டிருந்தால் வசம்பை சுட்டு கரியாக்கி இரண்டு இழை இழைத்து நாக்கில் தடவி தொப்புளை சுற்றிலும் தடவி வர வலி நீங்கும். இதற்கு Hynotic, tranquilizing action உள்ளதால் குழந்தை நிம்மதியாக தூங்க ஆரம்பிக்கும்.

காதில் சீழ்வடிதல் நிற்க பெருங்காயம், வசம்பு பூண்டு இவற்றை வேப்பெண்ணையில் காய்ச்சி காதில் விடலாம்.

5. கற்பூரவல்லி

இதை ஓமவல்லி என்றும் அழைக்கிறார்கள். Anisoclilus carnosus Family Lamiaceae இதில் உள்ள essential oil க்கு Muscle relaxant action உள்ளது.

இதற்கு bactericidal, fungicidal Anti Spasmodic action உள்ளது. பிறந்த குழந்தைக்கு உண்டாகும் சுரம், சளி, இருமல் இவற்றிற்கு ஒரு இலையை எடுத்து அளவில் வாட்டி பிழிந்து அத்துடன் தேன் கலந்து 1 டீஸ்பூன் கொடுக்க நீங்கும். இது எளிய முறையாகும். பிறந்த உடனேனே பெரிய மருந்துகளை கொடுத்து பக்க விளைவை ஏற்படுத்தாமல் தடுக்கலாம். குழந்தைகளுக்கு, பெரியவர்களுக்கு பல்லில் வலி ஏற்பட்டால் அந்த பல்லில் இடையில் ஒரு இலையயை வைத்து மெல்ல வலி உடனே நீங்கும். தொண்டையில் சதை வளர்ச்சி உள்ள குழந்தைகளுக்கு ஐஸ் கிரீம், கூல்டிரிங்ஸ் இவை கொடுக்க முடியாத நிலை உள்ளது. அப்படியும் அவர்களை கட்டுப்படுத்த முடியாமல் குழ்நதை இவற்றை சாப்பிடும்போது வீட்டிற்கும் வந்த பிறகு 2 இலையை தொண்டையில் படுமாறு மெல்ல தின்னக் கொடுத்தால் பாதிப்பு ஏற்படுவதில்லை. தொண்டை சதையில் Tonsillitis -ல் சில சமயம் white patch இருக்கும். இவை dyptheria வர காரணமாகும். இதையும் இதன் இலை நீக்கும். செடியை எல்லோரும் வீட்டில் வளர்க்கலாம்.

6. அரத்தை

Alpinia galnga - Family - Zingiberaceae essential oil - Methyl cinnamate.

It contains galangin, campheride, Alpinin உள்ளது. Anti-spasmatic action on involuntary muscle - Inhibiting excessive peristaltic movements of the intestine C, N.S. depressant - Bactericidal - infecticidal - anti - T.B. Properties உள்ளது.

வேர்

குழந்தைகளுக்கு அதிகமாக பயன்படுத்தப்படும் மூலிகையாகும். வரட்டிருமல் இருக்கும்போது 1 தண்டு சிற்றரத்தை வாயிலிட்டு சுவைக்க நீங்கும். சிற்றரத்தையை சுட்டு பொடித்து அத்துடன் தேன் கலந்து கொடுக்க குழநதைகளின் சளி நீங்கும். தாய்க்கு உண்டாகும் குளிர் சுரம் நீங்க இதனை கஷாயம் இட்டுக் கொடுக்கலாம்.

7. ஓமம்

Carum trachyspermus ammi Famiy Umbellifeare இதில் essentail oil thymol உள்ளது. இது powerful antiseptic ஆகும். இதனால் Salmonella typhosa நீங்கும். ஓமத்திற்கு வயிற்றுப் பொருமல், கழிச்சல், இருமல் இவைகளை நீக்கும் குணம் உள்ளது. இதற்கு ஓமவாட்டர் என்று கடைகளில் கிடைக்கும். 500 மிலி. 10 ரூ.க்குள் தான் கிடைக்கும். அதை வாங்கி வீட்டில் வைத்துக் கொண்டால் அசீரணமோ, வாந்தியோ, கழிச்சலோ ஏற்பட்டால் 1 அவுன்ஸ் அதாவது 30 மிலி எடுத்து சிறிது நீர் கலந்து உண்டு வர மேற்கூறிய நோய்கள் நீங்கும்.

குழந்தைகளுக்கு கட்டியோ, வீக்கமோ, இருந்தால் அவை கரைய ஓமத்தை நீர் விட்டு அரைத்து சிறிது சூடு செய்து தடவி வரலாம்.

மூக்கடைப்பு இருந்தால் ஓமத்தை தூள் செய்து மெல்லிய துணியில் முடிந்து அடிக்கடி முகர்ந்து பார்க்க மூக்கடைப்பு நீங்கும். இன்கேலர் பயன்படுத்துவதனால் உண்டாகும் epistaxis என்ற மூக்கிலிருந்து இரத்தம் வருதல் இருக்காது.

8. வல்லாரை

Centella asiatica Formily Umbelliferae இதில் Vellarine, pectic acid, Ascorbic acid உள்ளது. இதற்கு வேறு பெயரே யோசனவல்லியாகும். இது அனைவரும் அறிந்த மூலிகையாகும். ஞாபக சக்தி குறைவா, படிப்பில் மந்தமா இவற்றை நீக்க வல்லாரையை மக்கள் பெரிதும் பயன்படுத்துகின்றனர். இதனை கீரையாக சமைத்துப் பயன்படுத்தலாம். மாத்திரையாகவும் கடைகளில் கிடைக்கும். இதற்கு உள்ள மற்றொரு முக்கியமான குணம் லெப்ரசி நோயில் உடலில் எண்ணெயைத் தடவியது போல் ஒருவித மினுப்பு உண்டாகும். அதை நீக்குவல்லது வல்லாரையாகும்.

9. ஆடாதோடை : Adathoda vasica Family - Acanthaceae

இதில் Vasicine என்ற Alkaloid உள்ளது. இது Bronchodilator Mild Cardiac depressant இதற்கு சிறப்பாக சளி, இருமல், இரத்த கொதிப்பு இவற்றை நீக்கும் குணமுடையது.

ஆடாதோடையும், ஐந்து மிளகும் பாடாத நாளெல்லாம் பாடும் என்பது பழமொழி. இருமல், சளி எல்லாம் நல்ல குரல் வளம் பெருக இதன் இலை இரண்டை எடுத்து 5 மிளகு சேர்த்து தட்டி கஷாயம் இட்டுக் கொடுக்க நல்லது.

இரத்தக் கொதிப்பு நீங்க இதன் இலைச் சாறு 20 துளிகள் 1 டீஸ்பூன் சேர்த்துக் கொடுக்க நீங்கும். இதன் தனிச்சாறு சீதக்கழச்சலை குணமாக்கும்.

10. உத்தாமணி : Pergularia extansa - Family Asclepiadaceae

இதற்கு கருப்பப் பையையும், இதர Involuntary muscleயையும் சுருங்கி விரியச் செய்யும் தன்மை உள்ளது. வயிற்றில் உள்ள புழுக்களையும் கொல்லும். இதனை இதர மருந்துகளில் சேர்த்தே பயன்படுத்துகிறோம். வயிற்றுப் புழுக்களை கொல்ல இவை விளக்கெண்ணையுடன் சேர்த்து காய்ச்சி கொடுக்கலாம். சளியை நீக்க இதர மருந்துகளாகிய கோரோசனை. கஸ்தூரி இவற்றுடன் கலந்து கொடுக்கலாம்.

சித்த மருத்துவம்

சித்த மருத்துவ நிபுணர் டாக்டர் இரா. கண்ணன், திருச்சி - 17

தமிழ் மருத்துவமே சித்த மருத்துவம். தமிழிலே அறுபத்தி நான்கு வகை கலைகள் உள்ளன. அதில் ஒன்றுதான் இந்த தமிழ் மருத்துவக் கலையாகும். சித்தர்கள் என்று மெய்ஞ்ஞானிகளால் இம் மருத்துவம் பேணி வளர்க்கப்பட்ட காரணத்தினால் இது சித்த மருத்துவம் என வழங்கப்படுகிறது.

இந்த சித்தர்களில் பதினெட்டு பேர் குறிப்பிடத் தக்கவர்களாவர். அவர்களில் அகத்தியர் முதன்மையானவர். இந்த சித்தர்கள் வரலாற்றுக் காலத்திற்கு முன்பு வாழ்ந்தவர்கள். இவர்களில் சிலர் அரேபியா, துருக்கி, சீனா முதலிய நாடுகளுக்குச் சென்று நம் மருத்துவத்தை பரப்பி இருக்கிறார்கள் என்று நம்பப் படுகிறது.

பஞ்ச பூதக் கொள்ளை

அண்டம் என்றழைக்கப்படுகின்ற உலகில் என்ன என்ன இருக்கின்றதோ அதே தான் பிண்டம் என்றழைக்கப்படுகின்ற மனிதனின் அமைப்பிலும் இருக்கின்றது. இவ்வுலகம் நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் என்ற பஞ்ச பூதங்களால் ஆனது. மனிதனும் இந்த பஞ்ச பூதங்களால் ஆனவன், இதனையே

"அண்டத்திலுள்ளதே பிண்டம்
பிண்டத்திலுள்ளதே அண்டம்
அண்டமும் பிண்டமும் ஒன்றே
அறிந்து தான் பார்க்கும் போதே"

என்ற சட்டமுனி பாடலால் அறியலாம்.

மனித உடலில் இப் பஞ்ச பூதங்களின் சக்தி வேறுபடுகின்றபோது நோய்களைத் தோற்றுவிக்கின்றது. அதே போல பஞ்ச பூதங்களின் தன்மை அண்டத்திலே மாறுபடுகின்ற போது மழை, மின்னல், நில நடுக்கம், எரிமலை போன்ற நிலைகள் உலகைப் பிடித்து ஆட்டிப் படைக்கின்றன.

மனிதன் ஒரு சிறிய உலகம் என்றால் அது மிகையாகாது. மனித உடலில் இருக்கின்ற ஒவ்வொரு உறுப்பும் இந்த அண்டத்திலுள்ள சில வகை சக்திகளோடு தொடர்பு உடையதாக இரக்கின்றன. மனித உடற் கூறுகள் ஒவ்வொன்றும் கிரகம், நட்சத்திரம் இவைகளின் ஈர்ப்புச் சக்திகளுக்கு ஆளாகின்றன. உதாரணமாக சூரியனுக்கும், இதயத்திற்கும், மூளைக்கும் சந்திரனுக்கும், ஈரலுக்கும் வியாழனுக்கும், சிறுநீரகங்களுக்கும் சுக்கிரனுக்கும் நெருங்கிய தொடர்பு உள்ளது.

மனித உடல் இவ்வுலகைப் பிரதிபலிக்கின்ற ஓர் அற்புதப் படைப்பாகும். சித்தர்களின் கொள்கைப்படி இவ்வுடல் தொண்ணூற்றாறு தத்துவங்களால் ஆனது. அவையயாவன - ஐம்பூதம், கன்மேந்திரியம், ஞானேந்திரியம், அந்தக் கரணம், தச நாடி, பஞ்ச அவஸ்தை, மும்மலம், முக்குணம், முப்பிணி, மும்மண்டலம், எண் ராகம், ஆறாதாரம், ஏழு வகைத் தாது, தச வாயு, பஞ்ச கோசம், ஒன்பது வாசல் ஆகியவையாகும்.

சித்தர்கள் கொள்கைப்படி நமது உடல் எழுபத்தி இரண்டாயிரம் நாடிகளாலும், பதின்மூன்றாயிரம் நரம்புகளாலும், பத்து முக்கிய பெரு நாடிகளாலும் ஆனது என்றும் இதில் ஏற்படுகின்ற மாற்றங்களால் நாலாயிரத்து நானூற்று நாற்பத்தி எட்டு நோய்கள் உண்டாகிறதென்றும் விளக்கமாக பல பாடல்கள் மூலம் கூறுகின்றனர்.

நமது உடல் பஞ்ச பூதங்களால் ஆனது என்று கூறினோம் அல்லவா?

1. என்பு, சதை, நரம்பு, தோல், முடி முதலியவை - மண் கூறு
2. பித்தம், ரத்தம், விந்து, வியர்வை முதலியவை - நீர் கூறு
3. பசி, தாகம், தூக்கம், அழகு முதலியவை - தீக் கூறு
4. சுருக்கம், விரிவு, மலம் முதலியவை - காற்று கூறு
5. இதயம், கழுத்து, தலை முதயலிவை - ஆகாயக் கூறு

எனக் கருதப்படுகின்றன.

நோய் நாடல்

சித்த மருத்துவத்தின்படி மூன்று முக்கியத் தத்துவத்தின் அடிப்படையில் உடல் அமைந்துள்ளது எனக் கூறின் அது மிகையாகாது. அவை வாத, பித்த, கபம் என்ற முக் குற்றங்களாம். இவை தன்னளவில் மிகினும், குறையினும் நோய்க்ள உண்டாகின்றன. இம் முக்குற்றங்களே காற்று, தீ, நீர் ஆகியவைகளின் பிரதிபலிப்பாக நின்று அண்ட பிண்ட தத்துவத்தை உறுதிப்படுத்துகின்றன.

எவ்வாறெனில் வெளிக்காற்று உடலினுள் இருக்கும் வாயுடன் தொடர்புடையதாகவும், வெளித் தீ உடலின் பித்தத்துடன் தொடர்புடையதாகவும், வெளித் தண்ணீர் உடலின் கபத்துடன் தொடர்புடையதாகவும் உள்ளது. இதன் காரணமாக மனிதன் அண்டத்துடன் தொடர்புள்ளவனாக ஆகி அதில் ஏற்படுகின்ற அடிப்படை மாறுதல்களுக்கு மனித உடலும், உள்ளமும் ஆட்படுகின்ற தத்துவத்தை விளக்குவதே முக்குற்ற விதியாகும்.

சித்த மருத்தவத்தின்படி குண பாடமும், நோய் அறியும் முறையும் ஒரே அபடிப்டையைக் கொண்டது. உலகிலுள்ள தாது, தாவர, சீவப் பொருட்கள் இம்மூன்று தத்துவங்களின் சேரக்கையால் ஆனதாகும். ஆகவே நோய்க்கு காரணமான முக்குற்றத்தை கண்டு பிடித்து அதன் அடிப்படையில் அக் குற்றத்தை நீக்கவல்ல மருந்தினையோ, உணவையோ கொடுத்து குணப்படுத்துவதே சித்த மருத்துவத்தின் சிறப்பாகும். வாத, பித்த, கபம் என்ற முக்குற்றகங்கள் 1, ½, ¼ என்ற அளவில் நின்று நமது உடலை இயல்பான நிலையில் வைத்திருக்கிறது. இந்த விகிதத்தில் மாறுதல் ஏற்படின் நோய் தோன்ற ஏதுவாகின்றது. அக் குற்றங்களுக்கு எற்ப சிகிச்சை செய்து முக்குற்றங்களை சமநிலைப் படுத்துவதே சித்த மருத்துவ சிகிச்சை முறையாகும்.

தமிழரின் வாழ்வியல் நெறிகளும், சமையல் முறைகளும், பொருட்களும் விஞ்ஞான வகையில் அமைந்தவை. நமது அறுசுவை உணவே நமது சிறப்பை எடுத்துக் காட்ட போதுமானதாகும். ஐம்பூதங்கட்கும், அறுசுவைகட்கும், முக்குற்றங்களுக்கும் மிக நெருங்கிய தொடர்பு உண்டு. ஐம்பூதங்களின் சேர்க்கையால் அறுசுவைகள் உண்டாகின்றன.

உதாரணமாக மண்ணும், தீயும் சேர்ந்து புளிப்புச் சுவையும், மண்ணும் நீரும் சேர்ந்து இனிப்புச் சுவையும், மண்ணும் காற்றும் சேர்ந்து துவர்ப்பு சுவையும், தீயும், நீரும் சேர்ந்து உவர்ப்பு சுவையும், தீயும் காற்றும் சேர்ந்து கார்ப்புச் சுவையும், காற்றும் ஆகாயமும் சேர்ந்து கைப்புச் சுவையும் உண்டாகின்றன. இச்சுவைகள் மிகுந்தாலும் குறைந்தாலும் முக் குற்றங்களில் மாறுதல் உண்டாகின்றன. அதனால் நோய்கள் உண்டாகின்றன.

நவீன மருத்துவத்தின்படி நோய் என்பது உடல் இயல்பான நிலையிலிருந்து மாறுபட்ட நிலை அல்லது உடல் நலத்திற்கு ஊறு ஏற்பட்ட நிலை என்று கொள்ளப்படுகின்றது. ஆனால் சித்தர் கொள்கைப்படி நோய் அண்டத்தின் சொல்வாக்கல் ஏற்படுகிறதென்று சொன்னோம். அண்டம் என்ற பதத்திற்கு பூவுலகம் என்பது மட்டுமல்லாமல் மற்ற எல்லா கிரகங்களும் சேர்ந்து பரப்பு என்று கொள்ளலாம். கிரகங்களின் செல்வாக்கினாலும், நோய்கள் ஏற்படுகின்றன. அமாவாசை தினத்தன்று பைத்தியம், வாதம், மூளை தொடர்பான பிணிகள், விடக் கடிகள் முதலியன அதிகமான தொல்லை தருவது கண்கூடு. இவ்வாறான நோய்கள் மருத்துவத்திற்கு கட்டுப்படாமல் இருந்து கிரகங்களின் மாற்றத்தினாலேயே குணமாகவதையும் காண்கிறோம்.

குற்றமுடைய அல்லது ஊறு பயக்கக் வடிய பல பொருட்கள், உணவு, நீர், காற்று, தோல் முதலியவைகள் மூலம் உடலினுள் செல்கின்ற காரணத்தாலும் நோய்கள் ஏற்படுகின்றன.

நோய்கள் தோன்ற மனமும் முக்கிய காரணமாக அமைகின்றது. இந்த வகையான நோய்கள், காமம், தீய ஆசைகள், விகாரமான எண்ணங்கள் முதலியவைகளின் காரணமாக ஏற்படுகின்றன. இவ்விதம் உள மாறுதல்கள் உடல் மாறுதல்களுக்கு காரணமாகின்றன. உதாரணமாக வெட்கத்தின் காரணமாக முகம் சிவப்படைதலையும், பயத்தின் காரணமாக முகம் வெளுப்பதையும், மன எழுச்சி காரணமாக கருச் சிதைவு, குறைபாடுடைய கர்ப்பம், இசிவுகள் ஏற்படுவதையும் காண்கின்றோம். மனப் பிரமையாலும், ஆத்ம ரீதியான மாறுதல்களாலும் கூட நோய்கள் உண்டாகின்றன.

நாடி நிதானம்

வாதம், பித்தம், கபம் என்ற முக் குற்றங்களின் நிலையறிய நாடி நிதானம் பயன்படுகிறது. சித்த மருத்தவ நோய் கணிப்பில் நாடி முக்கிய பங்கு வகுக்கிறது. மனித உடலில் முக்குற்றம் தத்துவத்தை ஆழ அறிந்தாலொழிய நாடி மூலம் நோயைக் கணிப்பது அரிது. குறிப்பிட்ட உறுப்பில் என்ன கோளாறு

ஏற்பட்டுள்ளது என்று கணிக்கும் அளவோடு நின்று விடாமல் அந்தகரண நிலைகளையும் பொருத்திப் பார்த்து இன்ன கறை ஏற்பட்டுள்ளது என்று கணிக்கும் முறையில் சித்த மருத்துவ நோயணுகும் முறை அமைந்துள்ளது..

சித்த மருத்துவத்தின் சிறப்புகள்

சித்த மருத்துவத்தில் மருந்து சிகிச்சை, அறுவை சிகிச்சை, யோக சிகிச்சை, பிராணாயம சிகிச்சை, உள சிகிச்சை, நீர் சிகிச்சை, மண் சிகிச்சை, காந்த சிகிச்சை எனப் பல வகைகள் உள்ளன.

காய கல்பம்

சித்தர்கள் நோயினின்று மக்கள் விடுபட்டு தேக ஆரோக்கியத்துடன் நீண்ட நாள் வாழ வழி முறைகள் கண்டு பிடித்திருக்கிறார்கள். இதுவே "காய கால்பம்" எனப்படும். சித்தர்கள் கொள்கைப்படி என்றும் இளமையை முதுமையடையாமல் வைத்திருப்பதே காயகற்ப முறையாகும். இம்முறைப்படி நேயின்றி நம் உடலைக் காத்து இளமையோடு மரணமிலாப் பெருவாழ்வை அடையலாம்.

சில மருத்துவ முறைகளில் என்ன நோய் உள்ளதோ அந்த நோயை உண்டாக்கும் மூல காரணத்திற்கு எதிராக மருந்து கொடுத்து அதை நீக்குவது இது 'எதிருரை' எனப்படும்.

சில மருத்து முறைகளில் என்ன நோயோ அந்த நோயின் குணமுள்ள மருந்துகளையே சிறிய அளவில் கொடுத்து அந்த நோயை குணமாக்குவது இது 'ஒப்புரை' எனப்படும்.

ஆனால் சித்த மருத்துவத்தில் இந்த எதிருரையும் உண்டு. ஒப்புரையும் உண்டு. இரண்டும் சேர்ந்த கலப்புரையும் உண்டு. இதுவே சித்த மருத்துவத்தின் சிறப்பாகும்.

சித்த மருத்துவரின் இலக்கணம்

நோய்கள் அதற்கான சிகிச்சை முறைகள் இவைகள் மட்டுமல்லாது மருத்துவனுடைய இலக்கணம் பற்றியும் சித்தர்கள் மிக விளக்கமாகக் கூறி உள்ளார்கள். தமிழ் மருத்துவம் அற்புதமான முறையில் பல கலைகள் அடங்கிய விஞ்ஞான முறையாகும். இம்முறையை கையாளும் மருத்துவர் மருந்து, ரச வாதம், தத்தும், மந்திரம், யோகம் வானநூல் ஆகிய பல கலைகளிலும் வல்லுநராக இருத்தல் வேண்டும் என்று இலக்கணம் வகுக்கிறது சித்த மருத்துவம். அதாவது சித்த மருத்துவர் சாதாரண மனிதனினிலிருந்து மேம்பட்டவனாக இருத்தல் வேண்டும்.

சித்த மருத்தவ முறையில் மருந்துகள் தயாரிக்கும் முறையே தொண்ணூற்றாறு தத்துவங்களையும் முக்கியமாக முக்குற்றங்களையும் அடிப்படையாகக் கொண்டதாகும். மருந்துகள் கியாழம், சூரணம், மாத்திரை, லேகியம், இரசாயணம், மெழுகு, தைலம், பற்பம், செந்தூரம், கட்டு, களங்கு, சுண்ணம் என்ற வடிவங்களில் உள்ளன. பிணி நீக்கும் முறையில் முதலில் மூலிகையில் தொடங்கி பின் படிப்படியாக வீரியம் மிக்க மருந்துகளை வழங்க வேண்டும் என்ற வழி கையாளப்படுகிறது. இதனையே

"வேர்பாரு தழையாரு மிஞ்சினக்கால் மெல்ல மெல்ல
பற்ப செந்தூரம் பாரே"

என்ற அடிகளால் அறியலாம்.

சித்த மருத்துவம் மூலம் பல நோய்களையும் குணப்படுத்த இயலும். என்னுடைய இருபத்தி ஐந்து ஆண்டுகால அனுபவத்தில் கீழ்கண்ட நோய்களை எல்லாம் குணப்படுத்தி இருக்கிறேன்.

தோல் சம்பந்தப்பட்ட எல்லா நோய்களையும் குணப்படுத்தலாம். லூகோ டெர்மா எனப்படும் வெண் குஷ்டத்தையும், எந்த விஷப் பூச்சி கடித்ததென்று தெரியாத காணாக்கடியையும் சித்த வைத்தியம் மூலம் குணப்படுத்தலாம். மேலும் சித்த வைத்தியத்தால் முக வாதம், சீல்வாதம், முடக்கு வாதம், வயிற்றுப் புண், கொலைட்டிஸ் ஒற்றைத் தலைவலி, ஒவ்வாமை, வெளி மூலம், உள் மூலம், நகச் சொத்தை, பித்த வெடிப்பு, மயிர்புழு வெட்டு, தலை முடி உதிர்தல், நாட்பட்ட காது சீழ், ஆஸ்த்துமா, மலட்டுத்தன்மை, குறிப்பாக ஆண் மலட்டுத்தனமை பெண்களுக்கு ஏற்படும் வெள்ளைப்படுதல் முதலிய எல்லா வகை நோய்களையும் சித்த மருத்துவத்தால் குணப்படுத்த முடியும்.

இவ்வாறாக மேம்பாடுடைய தமிழ் மருத்தவ முறையை மேற் கொண்டு அனைவரும் நன்மையடைய வேண்டுவதுடன்,

"உடம்பினை முன்னம் இழுக்கென்றிருந்தேன்
உடம்பினுக்குள்ளே உறு பொருள் கண்டேன்
உடம்பிலே உத்தமன் கோயில் கொண்டானென்று
உடம்பினை யான் இருந்து ஓம்புகின்றேனே"

என்ற திருமூலரின் திருவாக்கிற்கேற் உத்தமன் கோயில் கொண்டுள்ள இவ்வுடம்பை **நன்முறையில்** பேணுவோமாக!

சித்த மருத்துவ மூலிகைகளைப் பற்றிய தற்கால அறிவியல் கருத்துக்கள்

டாக்டர் **கா. பழநிச்சாமி**, பி.ஐ.எம்.,
மருத்துவ அலுவலர் (சித்தா)
அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனை,
சென்னை - 106.

இடம் : அருங்காட்சியம்

நாள் : 20.2.96

மனித சமுதாயமும், பிற உயிரினங்களும் உயிர் வாழ இன்றியமையாதது காற்று, நீர், உணவு, உரையுள், உடை என அமைகின்றன. இவற்றில் எல்லா உயிரினங்களும் தாவரங்களை உணவாக பெரிதும் உட்கொள்கின்றன. இதற்கு அடுத்த நிலை கால வேறுபாடு, இடவேறுபாடு, தட்பவெப்பநிலை வேறுபாடு, உணவு வேறுபாடு போன்ற காரணங்களால் நோய்கள் உண்டாவதால், அதை தீர்க்கும் பொருட்டு மருந்தை உட்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. இம் மருந்துப் பொருட்களில் பெரும்பாலானவை மூலிகைகளால் ஆனவையாக இருக்கும். எனவே உயிரினங்கள் மூலிகைகளை நம்பியே தங்கள் வாழ்க்கை முறையை அமைத்துக் கொண்டிருக்கின்றன.

உலகின் ஒவ்வொரு பகுதியிலும், அந்த அந்த சூழலுக்கு தகுந்தாற்போல் நாகரீகங்கள் தோன்றின. அவ்விடத்தில் உள்ள மக்கள் தங்களுக்கென அங்குள்ள நாகரீகத்தின் அடிப்படையில் ஒரு மருத்துவ முறையை கடைபிடித்து வருகின்றனர்.

இந்திய துணைக் கண்டத்தில் திராவிட நாகரீகத்தில் தமிழ் மொழியையும், சைவ சித்தாந்த கொள்கையையும், அடிப்படையாகக் கொண்டு உடல் நலம் மட்டுமல்லாமல் உள்ளத்து நலனையும், சமுதாய நலனையும், காப்பதில் வல்லவர்களாகவும், விளங்கிய சித்தர்களால் வளர்க்கப்பட்ட மருத்துவம் சித்த மருத்துவம் ஆகும்.

ஆரிய நாகரீகத்தில் வட மொழியாகிய சமஸ்கிருதத்தையும், வேதத்தையும் அடிப்படையாகக் கொண்டு எழுந்த மருத்துவம் ஆயுர்வேத மருத்துவம்.

மொகலாயர்கள் இந்த நாட்டிற்கு வந்தபோது அவர்களால் புகுத்தப்பட்ட மருத்துவம் யுனானி மருத்துவம் ஆகும். அது உருது மொழியை அடிப்படையாக கொண்டுள்ளது.

அடுத்து இந்த நாட்டில் கிடைக்கும் மருந்து பொருட்களை வாங்க வந்த வியாபாரிகளாகிய ஆங்கிலேயர்கள் நாட்டில் இருந்த ஒற்றுமை இன்மையை தங்களுக்குச் சாதகமாக பயன்படுத்திக்கொண்டு, நாட்டை ஆண்டு அனுபவித்தனர். அவர்கள் இந்த நாட்டு மக்களின் மீது திணித்த மருத்துவமுறை அலோபதி எனக் கூறப்படும் நவீன மருத்துவமுறை ஆகும். இதற்கு லத்தீன் என்ற மொழி அடிப்படையாக அமைந்து, பின்னாளில் ஆங்கிலம் அடிப்படையாக அமைந்தது.

உலகில் உள்ள எல்லா மருத்துவமுறைகளுக்கும் மருந்துகளாக அமைவது மூலிகைகளாகும்.

ஆயுர்வேத மருத்துவத்தில் பெரும்பாலும் மூலிகைகளை பயன்படுத்துகிறார்கள். ஓரளவு கனிம பொருட்களுடன் விலங்கின் பொருளையும் பயன்படுத்துகிறார்கள்.

யுனானி மருத்துவத்தில் மூலிகைகளுடன் விலங்கினப் பொருட்கள் மிகுதியும் குறைந்த அளவு கனிம பொருட்களும் பயன்படுத்துகிறார்கள்.

சித்த மருத்துவத்தில் மூலிகைகள், விலங்கின பொருட்கள், கனிமப் பொருட்கள் ஆகிய மூன்றையும் பயன்படுத்துகிறார்கள். மூலிகை பொருட்கள் கிடைக்காத காலத்தில் மருந்துகள் தொடர்ந்து கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்தில் கனிம பொருட்களான உப்பு, உபரசம், உலோகங்கள், பாடானங்கள், ஆகியவைகளையும் விலங்கின பொருட்களான கஸ்தூரி, கோரோசனம், கடல்படு திரவியங்களான முத்து, பவளம் போன்றவைகளையும், மருந்துகளாக மாற்றி மக்களுக்கு பயன்படுத்தி வருகின்றனர். மேலும் தற்காலத்தில் புழக்கத்தில் இருக்கும் வைப்பு சரக்குகளை (Synthetic form of medicine)யும் பயன்படுத்தி வருகின்றனர்.

இத்துடன் அசுர மருத்துவம் என கூறப்படும் அறுவை மருத்துவமும் ஒவ்வொரு மருத்துவமுறையிலும் இருந்து வந்தது. சித்த மருத்துவத்திலும், ஒட்டியம், சல்லியம் என்ற சொல்லாட்சியுடன் வழங்கப்பட்டு வந்தது.

எனவே பிற மருத்துவ முறைகளைவிட 18 சித்தர்களில் ஒருவரான தேரையர் காலமான கி.பி. 6ஆம் நூற்றாண்டிலேயே மேற்கண்ட முன்னேற்றங்களுடன் விளங்கியது ன்பது வரலாற்று உண்மை.

நவீன முறை மருத்துவமான அலோபதி மருத்துவத்திலும் நம் நாட்டை சூழ்வதற்குமுன் பிற மருத்துவ முறைகளில் இருந்தது போலவேதான் முன்னேற்றம் இருந்தது. ஆங்கிலேயர்கள் உலகின் பெரும் பகுதியை ஆண்டதால் அங்கு, அங்கு உள்ள அந்தந்த நாட்டு மருத்துவ முறைகளில் கண்ட பயனுள்ள பல மருத்துவ முறைகளை தங்களுடைய மருத்துவத்தில் இணைத்துக் கொண்டு வளர்ந்துள்ளனர். எடுத்துக்காட்டாக சொல்வோமானால் கிட்டத்தட்ட இந்நாட்டு மருத்துவ முறைகளில் பயன்படுத்தும் 650 மூலிகைகளையும், பிளாஸ்டிக் சர்ஜரி என கூறப்படும் மாற்று உறுப்பு வைத்தல் முறையையும் எடுத்துக் கொண்டனர்.

ஆக நவீன முறை மருத்துவம் என்பது பிறநாட்டு மருத்துவமுறைகளையும் சேர்த்து ஒரு கூட்டு மருத்துவமுறை என்பதை மருத்துவ வரலாற்று பேராசிரியர்கள் எடுத்தியம்புகின்றனர்.

சித்த மருத்துவத்தில் நெடுங்காலமாக, மருந்தாக பயன்படுத்தப்பட்டதும், மூலிகைகளை, தற்கால அறிவியலார் பல்வேறுபட்ட சோதனைகள் செய்து ஆய்ந்து பார்த்தபோது சித்த மருத்துவ நூற்களில் கூறியுள்ள கருத்துக்கள் சரிதான் என்பதை ஒப்புநோக்கி மெய்ப்பிக்கின்றனர். நூற்றுக்கணக்கான சித்த மருத்துவ மூலிகைகளை இவ்வாராய்ச்சியில் ஈடுபடுத்தப்பட்டிருப்பினும் சில மூலிகைகள் பற்றி மட்டும் சில கருத்துக்களை இங்கே எடுத்துக்கூற விழைகின்றேன்.

1. அதிமதுரம் (GLYCYRRHIZA GLABRA)

இதனுடைய சூரணம் உள்நாக்கு வளர்ச்சியை குறைப்பதாகவும், (டான்ஸ் லைடீஸ்), வயிற்று புண்ணை ஆற்றுவதாகவும், இருமலை குறைப்பதாகவும் கண்டறியப்பட்டுள்ளது.

2. அருகம்புல் (CYNODON DACTYLON)

இதை கணபதி அனிமூலம் எனவும் கூறுவர். கணபதி எல்லா தீய சத்திகளையும் அழிப்பது போல், இவ்வருகம்புல்லும் எல்லாவித நச்சு தன்மைகளையும் போக்கவல்லது. இது நீர்ச்சருக்கு, குருதி மூலம், வலிப்பு, கழிச்சல், நீரிழிவு தோல் நோய்கள், சண் நோய்கள் ஆகியவைகளுக்கு மருந்தாவதோடு நுண்ணுயிர் கொல்லியாகவும் பயன்படுவதாக கூறுகின்றனர்.

3. ஆவாரை (CASSIA AURICULATA)

“ஆவாரை பூத்திருக்க சாவார் உளரோ” என்பது பழமொழி. விதையின் சத்து குருதியின் அ[illegible] சக்கரை சத்தை குறைப்பதாக கண்டறியப்பட்டுள்ளது. மேலும் தோல் நோய்களுக்கு பயனுள்ளதாகவும் அறியப்பட்டுள்ளது.

4. எருக்கு (CALOTROPIS GIGANTECAPROCERA)

இலைகளிலும் வேரிலும் இருந்து எடுத்த சத்து புற்றுநோய்க்கு பலன் அளிப்பதாக தெரிகிறது.

5. கடுகரோகினி (PICORORHIZA KURROA)

இதன் குடிநீரை கொடுத்து வரும்பொழுது ஒருசில நாட்களிலேயே மஞ்சட்காமாலை குறைகிறது.

6. கிச்சிலி கிழங்கு (HEDYCHIUM SPICATUM)

இச்சூரணம் தொடர்ந்து கொடுத்துவர நீரிழிவு குறைகிறது. பூஞ்சை காளான் நோயைப் போக்க வழங்கப்படுகிறது.

7. கீழ்க்காய் நெல்லி (PHYLLANTHUS FRACTERUS)

மஞ்சட்காமாலை என்றதும் நம் எல்லோர் மனத்திலும் உதிப்பது கீழ்க்காய்நெல்லியே. இந்நோய்க்குமட்டுமல்லாமல் நீரிழிவு நோயையும் கட்டுப்படுத்துகிறது.

8. **குன்றிமணி** (ABRUS PRECATORIUS)

இதன் விதைகளிலிருந்து எடுக்கப்பட்ட எண்ணெய் பரிசோதனையில் விலங்கினங்களுக்கு கொடுத்து பார்த்ததில் கருத்தடைக்கு உகந்த மருந்தாக பயன்படுவதாக தெரிகிறது.

9. **கோவை** (COCCINIA INDICA)

இனிப்புக்கு எதிரி-இதழுக்கு உவமை என்பது விடுகதை. இனிப்பு நோயான மதுமேகம் குறையும் என்பது தெளிவு. இக்காலத்தில் இதன் காயும் கிழங்கும் குருதியில் உள்ள அதிக சக்கரை சத்தை ஓரளவு குறைக்கிறது.

10. **சாதிக்காய்** (MYRISTICA FRAGRANS)

விந்து விரைந்து வெளியாவதை தடுக்கிறது. நுண்ணுயிர் கிருமிகளுக்கு எதிராகவும், தூக்கமுண்டாக்கியாகவும் செயல்படுகிறது.

11. **சிறுகுறிஞ்சான்** (GYMNEMA SYLVESTRE)

இவ்விலைச்சூரணம் நீரிழிவு நோயை கட்டுப்படுத்துகிறது.

12. **செம்பரத்தை** (HIBISCUS ROSACYINENSIS)

இதயத்தை வலுப்படுத்துவதாக அறியப்பட்டுள்ளது. பூக்களின் சூரணம் குறிப்பிட்டளவு கொடுக்க மாத விலக்கான 7வது நாளிலிருந்து 22 நாள் வரை கொடுத்துவர நான்கு ஆண்டுகளுக்கு கருத்தரிக்காமல் இருப்பதாக கண்டறியப்பட்டுள்ளது.

13. **சோற்றுக்கற்றாழை** (ALOES VERA)

கருத்தரிப்பதற்கும், மாதாந்திர தீட்டை முறைப்படுத்துவதற்கும் வழங்கப்படுகிறது.

தீப்பட்ட புண்களை விரைந்து ஆற்றுகிறது. சீன மருத்துவத்திலும் அவர்கள் பயன்படுத்தும் அழகு சாதனைப் பொருட்களில் மிகுதியும் பயன்படுகிறது.

14. **தண்ணீர் விட்டான் கிழங்கு** (ASPARAGUS RACEMOSUS)

இக்கிழங்கை பால் தரும் பசுக்களுக்கு கொடுத்துவந்தபோது, அதிக பால் சுரப்பது கண்டறியப்பட்டுள்ளது. இக்கிழங்கிலிருந்து செய்யும் சூரணம், நெய் ஆகியவைகளை பாலூட்டும் தாய்மார்களுக்குக் கொடுத்துவர பால் சுரப்பு அதிகமாகிறது.

15. **தும்பை** (LEUCAS ASPERA)

பாக்டீரியாக்களை எதிர்த்து போராடுவதிலும், தோல் நோய்களை போக்குவதிலும், மூச்சுபாதையில் சளியினால் ஏற்படும் திணறலைப் போக்குவதிலும் மிகுந்த பயனளிக்கிறது.

16. **துளசி** (OCIMUM SANCTUM)

மற்ற மருந்து பொருட்களுடன் துளசியையும் சேர்த்து கொடுக்க குளிர், சுரம், மஞ்சட்காமாலை ஆகியவை குறைகிறது.

17. **தொட்டாற்சிணுங்கி** (MYMOSA PUDICA)

நரம்பு நோய்களில் பலனளிக்கிறது. குறிப்பாக பேராசன நரம்பு அழற்சி என கூறப்படும் சையாட்டிகா நோயை போக்கி சரிசெய்கிறது, என்பது எலிகளுக்கு வழங்கியதில் கண்டறியப்பட்டுள்ளது.

18. **நாயுருவி** (ACHYRANTHES ASPERA) :

இதன் இலைகளில் நான்கை தினமும் நவீன மருந்துகளுடன் சேர்த்து கொடுக்கும்போது தொழுநோய் விரைந்து குணமாவது கண்டறியப்பட்டுள்ளது.

19. **நாவல்** (EUGENIA JAMBOLANA)

இதன் விதை சூரணம், நீரிழிவு நோயை கட்டுப்படுத்துகிறது.

20. பப்பாளி (CARICA PAPAYA)

குருதி உறைவதை தடுக்கிறது. புண்களை ஆற்றுகிறது. முகத்திற்கு பொலிவூட்டுகிறது.

21. பிரண்டை (CISSUS QUADRANGULARIS)

இதை உணவாக கொடுக்கும்போது எலும்பு விலங்களின் எண்ணிக்கை அதிகமாகி முறிவு விரைவில் கூடுகிறது.

22. புங்கு (PONGAMIA PINNATA)

வேர்பட்டை, இலை ஆகியவை தோல் நோயை போக்குவதிலும், குடற்புழுக்களை நீக்குவதிலும் பயன் தருகிறது.

23. புன்னை (CALOPHYLLUM TOMENTOSUM)

புன்னை விதையிலிருந்து எடுத்த சத்து நாய்களுக்குக் கொடுத்துப் பார்த்ததில், இதயநோயை போக்குவதாக கண்டறியப்பட்டுள்ளது.

24. பூண்டு (ALIUM SATIVUM)

வெள்ளைப் பூண்டை சரியாக உணவில் சேர்த்துக் கொடுத்துப் பார்த்தததில் கொளஸ்டிரால் என்னும் கொழுப்புச் சத்து குறைவதாகவும், கீல்வாயு, ரத்த அழுத்தநோயும் குறைவதாகவும் கண்டறியப்பட்டுள்ளது.

25. பூனைக்காலிவித்து (MUCUNA PRURIENS)

மனநல குறைவானவர்களுக்கு கொடுத்ததில் பயனுள்ளதாக தெரிகிறது. மேலும் நடுக்குவாதம் (பார்க்கின் ஸோனிசம்) நோயாளர்களுக்கும், குருதியில் அதிக கொழுப்புச் சத்துள்ளவர்களுக்கும் கொடுக்கப்படுகிறது.

26. பேய்ப்பீர்க்கு (LUFFA ACUTANGULA)

உலர்ந்த பேய் பீர்க்கை தண்ணீரில் ஊறவைத்து அதிலிருந்து எடுத்த சாற்றை நான்கு அல்லது ஐந்து துளிகளில் தினமும் மூக்கில் விட இரண்டு முதல் ஏழு நாட்களில் மஞ்சட்காமாலை குறைந்துள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது.

27. மருதாணி (LAWSONIA INERMIS)

தோல் நோய்களில், பூஞ்சகாளான் நோய்களை குறைப்பதிலும், இளைப்பு நோயை குறைப்பதிலும் பயனளிக்கிறது.

28. மலைவேம்பு (MELIA AZADIRACHTA)

கொச்கி புழுவையும், நாடா புழுவையும் இதன் இலை சத்து போக்குகிறது.

29. முருங்கை (MORINGA OLIFERA)

இதில் வைட்டமின் 'சி' சத்து மிகுதியாக இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. தோல்நோய்கள், புற்றுநோய் ஆகியவைகளை இதனுடைய இலை, வேர்பட்டை சத்துக்கள் குறைக்கின்றன.

30. மூக்கிரட்டை (BOERHAVIA DIFFUSA)

இதன் சமூலக்குடிநீர் (முழு செடி) சிறுநீர் பாதையில் ஏற்படும் அழற்சியினால் வந்த உடல் வீக்கத்தை போக்குவதோடு சிறுநீரகத்தில் அல்புமினைக் குறைக்கிறது.

31. வல்லாரை (CENTELLA ASIATICA)

குடற்புழுக்களை நீக்குவதில் பயனுள்ளதாக தெரிகிறது. குருதி சிவப்பணு எண்ணிக்கையை உயர்த்துகிறது. அதிக குருதி யூரியா சத்தை குறைக்கிறது.

32. வாழை (MUSA PARADISIACA)

வாழைக்காய் குடற்புண்களை ஆற்றுகிறது. கழிச்சல் நோய்க்கு பயனாகிறது. இதன் பூ அதிக குருதி சர்க்கரை சத்தை குறைக்கிறது.

33. வேங்கை (PTEROCARPUS MARSUPIUM)

இம்மரத்தின் சத்து நீரிழிவைக் குறைக்கிறது.

34. வேம்பு (AZADIRACHTA INDICA)

கருத்தடை சாதனமாக பயன்படும். பசை பொருளுக்குப் பதிலாக வேப்பெண்ணைய் பயன்படுத்த சிறந்த பலன் கிட்டுகிறது.

(குறிப்பெடுக்க உதவிய நூல்கள்)

1. குணபாடம் - மூலிகை
2. Medicinal Plants of India - Volume I & II by I.C.M.R., New Delhi)

மூலிகை மருத்துவமே சிறந்தது!

(டாக்டர் குன்றத்தூர் ராமமூர்த்தி)

பச்சிலை வைத்தியம் பரம்பரை பரம்பரையாக செய்யப்படுவதாகும். வேர்பார், தழைபார் என்கிறது சித்த மருத்துவம். மனித வாழ்வு தழைக்க இருப்பது மரத்தின் தழைகளாகும். நமது அத்தியாவசிய தேவைகளான உணவு, உடை, இடம் இவற்றில் அதிக பங்கு வகிப்பது இலைகளே. குறிப்பாக சொல்வதானால் உணவுக்கும், மருந்துக்கும் பயன்பட்டது இலைகளே. ஆதிகாலத்தில் இலைகளை ஆடைகளாக அணிந்திருந்தனர். தென்னை ஓலை வேய்ந்த வீடுகளில் ஆரோக்கியமாக வாழ்ந்தனர். பனை ஓலையால் விசிறிக் கொண்டனர். வாழை இலையில் உணவருந்தினர். இலைகளை எப்படி பயன்படுத்தினாலும் அதன் நற்குணங்கள் நம்மைச் சாரும். வாழை இலையையே உண்கலமாக ஆக்கிக் கொள்ளும்போது தலைமுடி நரையை தள்ளிப் போடலாம். பேயத்தி என்ற சிலு மரத்தின் இலைகளில் உணவருந்தினால் தங்க தட்டில் உணவருந்தியதற்கு சமமாகும். தாமரை இலையில் உணவருந்த தீமை உண்டாகும் என்று இது தாமரைப் பூ, கிழங்கு இவற்றிற்குண்டான நற்குணங்களுக்கு எதிரானது என்று சித்த மருத்துவம் கூறுகிறது.

இலைகளின் நற்குணங்களை அச்செடிக்கே பெயரிட்டு எழுதி வைத்துள்ளனர் சித்தர்கள். உதாரணத்திற்கு சிலவற்றைப் பார்ப்போம்.

1. வெட்டுக் காயத்தழை

இது சிறு பூண்டு இனம். இதை கிணத்துப் பூண்டு என்று கிராமத்தில் கூறுவர். குழந்தைகள் இதன் பூவை விரலில் கட்டி தாத்தா தலையை வெட்டு என்று கூறுவர். இது தன் பேருக்கேற்ப செயல்படுகிறது. தாவரயியலில் Tridax Procumbance என்பர். இதன் இலைகளை மைபோல் அரைத்து அடிபட்டு இரத்தம் வழிகின்ற காயங்களின் மேல் வைத்து கட்டி வைக்க இரத்தம் நின்று அப்படியே குணமாகிறது. இவ்விலையால் வேறு அனுபவங்களும் உண்டு. சிறுநீரில் இரத்தம் போதல், மலத்தில் இரத்தம் போதல், இருமினால் சளியில் இரத்தம் வெளியேறுதல், ஏன்? மாதவிடாயில் ஏற்படும் அதிக இரத்தப் போக்கு இவை எல்லாவற்றுக்கும் கிணத்துப் பூண்டின் இலைகளை அரைத்து காலை வெறும் வயிற்றில் இரண்டு கோலியளவு விழுங்கி வர உடன் குணமாகும். பல் ஈறில் இரத்தம் சொறிவதற்கு இதன் இலைகளை மென்று மென்று பல் துலக்கி வர ஈறு புண், வாய்ப் புண் நீங்கும். இலைகளில் விஷத்தன்மை கிடையாது. பத்தியமில்லை. இது எங்கும் கிடைப்பதுவும் ஆகும். பணச் செலவும் இல்லை. எத்தனை நாட்கள் வேண்டுமானாலும் யாரும் சாப்பிடலாம்.

2. எலும்பொட்டி இலை

இது சிறிய காடுகளில் வளர்வதாகும். புதர்ச் செடி. இதை காட்டு முருங்கை என்றும் கூறுவர். தாவரயியலில் இதை Ormocarpum Sennoides என்பர். இதன் இலைகள் அவுரி இலையின் சிறிய இலைகள் போல் காணப்படும். சுவைத்தால் வழுவழுப்பாகவும் ருசியாகவும் இருக்கும். இவ்விலைகளை பறித்து அரைத்து எலும்பு முறிவின் மேல் பூசி துணியால் கட்டி வைப்பதுடன், காலையில் ஒரு கோலியளவு உள்ளுக்கு சாப்பிட்டு வர விரைவில் குணமாகும். மேலும், கீல்வாத நோயால் ஏற்படும் மூட்டு வீக்கம், எலும்பு தேய்வு, காலை மடக்கும்போது நடக்கும்போது ஏற்படும் டக் டக் என்று சத்த முண்டாகும் பசையற்ற மூட்டு இவைகளை குணப்படுத்தும்.

3. வெதுப்படக்கி இலை

இச்சிறு செடி வேலி ஓரங்களில் தன்னிச்சையாய் வளரும். இதை பெரும் தும்பை என அழைப்பர். இதை தாவரயியலில் Anisomeles Malabarica என்பர். வெதுப்பு என்றால் காய்ச்சல் என்று பொருள். 35 கிராம் வெதுப்படக்கி இலைகளை குறுக அரிந்து அரை டீஸ்பூன் மிளகு சேர்த்து 400 மில்லி ஜலம் சேர்த்து கொதிக்க வைத்து நாலில் ஒரு பங்காக சுண்டினபின் வடிகட்டி வேளைக்கு 50 மில்லி காலை - மாலை குடித்து வர சுரம், வாந்தி, பேதி, இருமல், சளி குணமாகும்.

குழந்தைகளுக்கு பல் முளைக்கும் போது ஏற்படும் பேதி, சுரம் இவைகள் நீங்க வேளைக்கு 15 மில்லி அதாவது 3 டீஸ்பூன் கஷாயம் தினம் இரு வேளை கொடுத்து வர விரைவில் குணம் ஏற்படும்.

4. அகத்தி இலை

சித்தர்கள் நம் உடலில் அதிக பித்தத்தினால் ஏற்படும் தீவிரத்தை தீயாக பாவித்து மூன்றாக பாவித்து முத்தீயாக கூறியுள்ளனர். தீயினுடைய முதல் உணர்வுத்தன்மை எரிச்சலாகும். 1. பாத எரிச்சல் 2. வயிற்று எரிச்சல் 3. புத்தி விகாரத்தினால் மூளை தாக்கத்தால் ஏற்படும் மன எரிச்சல். நமக்கு கோபம் ஏற்படும்போது ஒரே எரிச்சலாக இருக்கிறது என்கிறோம். கோபம் கொள்பவரை பார்த்து எரிந்து விழுகிறார் என்கிறோம். ஆக நமக்கு ஏற்படும் அகத்தீயை சாந்தப்படுத்துவது அகத்தி இலையாகும். இதை தவறாமல் வாரம் ஒரு முறை சமைத்து உண்டு வருவத நலம்.

5. வெற்றிலை

பச்சையாக கொள்ளும் இலைகளின் வரிசையில் வெற்றிலையும் சேரும். அதனால் தான் தாம்பூலம் தரிப்பதை கிரமமாக வைத்துள்ளனர். இதில் சேருவது என்ன? வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு இதனால் நன்மையே. தற்காலத்தில் இதனுடன் சேரும் பல மசாலாக்களினால்தான் மந்தமாக விடுகிறோம்.

வாத - பித்த - சிலேத்துமம் என்னும் மூன்று தோஷங்களினால் ஏற்படும் பல நோய்களைப் போக்கக் கூடியது வெற்றிலை. மருந்தை தேனில் குழைத்துண்ண வெற்றிலையை பயன்படுத்தி மருந்தின் குணத்தை பெருக்கிக் கொண்டனர். நம் முன்னோர்கள். வெற்றிலையால் செய்யும் ஒரு கஷாய முறையை யாவரும் தெரிந்து பயனடைய வேண்டும். முறை எளிது, பயன் பெரிது. யாவரும் குறித்து வைத்துக் கொள்ள வேண்டும். 5 வெற்றிலை, சுக்கு ஒரு துண்டு, ஒரு பிடி அருகம்புல். இதில் அருகம்புல்லை வேருடன் எடுத்துக் கொள்ள வேண்டும். வேர் சஞ்சீவிக்கு ஒப்பானது. ஆடு மேய்வதுபோல் மேலாக கிள்ளிக் கொண்டால் பலனில்லை. முன் சொன்னவற்றை ஓரிரண்டாக இடித்து 3 குவளை நீர் அதாவது 600 மில்லி தண்ணீர் சேர்த்து நாலில் ஒன்றாக சுண்டின பின் வடிகட்டி காலை வெறும் வயிற்றில் தினம் ஒரு வேளை அருந்தி வர மயக்கம், தயக்கம், இரக்கம், கிருக்கு, சித்தப் பிரமை, மனக்கிலேசம், பயம், திகில், தூக்கமின்மை நீங்குவதுடன் நினைவாற்றல் அதிகரிக்கும். எத்தகைய நீடித்த நோயாளிகளும் மாதக் கணக்கில் மருந்து சாப்பிடுபவர்களும், என்ன நோய் என்று புரியாமல் திகைப்பவர்களும் இந்த கஷாயத்தை அருந்தி வர குணம் காண்பது நிச்சயம். நவீன மருத்துவத்தில் இன்று வெற்றிலையின் குணமும், மணமும் சேர்க்கப்படுவது பலருக்குத் தெரியாது.

6. வல்லாரை இலை

வல்லாரை இலை ஞாபக சக்திக்கு என்று யாவரும் அறிந்ததே. அதன் மற்ற பலன்களையும் தெரிந்து கொள்ள வேண்டும். வல்லாரை இலைகளை மென்று பல் தேய்த்தால் ஈறுபுண் ஆறும், இரத்தம் வடிவது நிற்கும். வாய் துற்நாற்றம் நீங்கும். வல்லாரை இலைகளை உலர்த்தி தூலாக்கி தேங்காய் எண்ணெய் சேர்த்து ஆறாத விரணங்கள், புண்களின் மேல் தடவி வர குணமாகும். வல்லாரை இலைத்தூளுடன் அதிமதுரத் தூள் சமனளவு கலந்து வைத்துக் கொண்டு, கியாஸ்ரைடிஸ் எனும் பித்தவாயு, வயிற்றுப்புண், மார்பு எரிச்சல், நாட்பட்ட சீதரத்த பேதி, பலவித படை சொறிகள் முதலானவற்றுக்கு காலை - மாலை வெறும் வயிற்றில் அரை டீஸ்பூன் வீதம் சாப்பிட்டு வர தீரும். வல்லாரை இலைச் சாற்றுடன் சமனளவு நல்லெண்ணெய் கலந்து இளந்தீயில் காய்ச்சி அடி பிடிக்காமல் கரண்டியால் துழாவி வந்து வண்டல் மெழுகு பதத்தில் இறக்கி ஆறவிட்டு வடிகட்டி சமனளவு தேங்காய் எண்ணெய் கலந்து வைத்துக் கொள்ளவும். இதை தினம் சிரசில் வைத்து தலை வாரி வர முடி வளரும். பொடுகு நீங்கும்.

ஓர் எச்சரிக்கை - அளவுக்கு அதிகமாக வல்லாரை இலைகளை உட்கொண்டால் தலைவலி, மயக்கம் ஏற்படும். நித்திரை கெடும்.

7. வள்ளைக் கீரை

கிராமங்களில் தரையில் நீர்க்கசிவு உள்ள இடங்களில் நிர் நிலைகளின் ஓரங்களில் படரும் வள்ளைக் கீரையை துவரம் பருப்புடன் சேர்த்து சமைத்து கடைந்துண்டு வர தேகத்திலுள்ள அசுத்தங்களையெல்லாம் மல - ஜலம் வழியாக வெளியேற்றும். தாய்ப்பால் வற்றிய பெண்களுக்கு இது ஓர் வரப்பிரசாதம். தாய்ப்பால் சுரக்கும்.

பொதுவாக நீர்நிலை ஓரங்களில் வயல்வரப்புகளில் எடுக்கப்படும் வள்ளைக் கீரை, பொன்னாங்கண்ணி கரசலங்கண்ணி போன்றவற்றை சமைப்பதற்கு முன் கீரையை ஆய்ந்து பின் உப்பு

கலந்த நீரில் 1 மணி நேரம் ஊறவிட்டு பிறகு நீரில் அலம்பி சமைக்கவும். ஏனெனில் மனிதனின் மலத்திலிருந்து வெளியேறும் E. Coli என்ற கிருமிகள் கீரைகள் மூலம் பரவி குடல் உபாதைகளை உண்டாக்கக் கூடும்.

8. மாவிலை

மாவிலையின் செம்பு நிறமான இளந் துளிர்களை காலை எழுந்தவுடன் 5 முதல் 10 துளிர்களைமென்று சிறிது நீர் அருந்தி வர சர்க்கரை வியாதி எனும் மதுமேக நோய் தணியும். மற்ற மருந்துகள் உண்ணும்போது உண்ணலாம். ஒரு மாதம் கழித்து நீர், இரத்த பரீட்சைகள் மேற்கொண்டு பார்த்தால் விளங்கும். பிறகு மற்ற மருந்துகளை குறைக்கலாம்.

சித்தர்கள் கூறியுள்ள பச்சிலைகளின் வைத்தியம் மிக சிறந்தது. முருங்கை இலையை சமைத்துண்டால் உடல் வலுக்கும். தூதுளம் இலையை துவையல் செய்து உண்டு வந்தால் டான்சிலைடிஸ் என்னும் அண்ணாக்குத் தூறின் நிண வளர்ச்சியும், சளியும் நீங்கும்.

முசுமுசுக்கை இலையையும், ஊற வைத்த பச்சரிசியையும் சேர்த்தரைத்து அடை சுட்டு தின்று வர இருமல் நோய் குணமாகும்.

மூக்கரட்டை இலைகளை பூண்டு, மிளகுடன் சேர்த்து துவட்டல் கறியாக்கி சாப்பிட்டு வர ஆஸ்த்துமா என்னும் இரைப்பு குறைவதுடன் சிறுநீரகம் வலுப்பெறும்.

வளர்க தாவரம்! வாழ்க யாவரும்!

எய்ட்ஸ் நோய்க்கு மூலிகை மருத்துவம்

பேரா. புது. செயப்பிரகாசு நாராயணன், எம்.டி. (சித்தா)
செயலாளர் - இம்ப்காப்ஸ்
சென்னை - 41.

பால்வினை நோய்களில் உயிர்கொல்லி நோயாகக் கருதப்படுவது எய்ட்ஸ் நோய். இன்றைக்கு அறுவை மருத்துவம் சாராத பொது மருத்துவத் துறையில் மூலிகை, மருத்துவம் எல்லாப் பிரிவுகளிலும் பயனுடையதாக அமைந்திருக்கின்றது.

நம்முடைய நாட்டில் மட்டும் அல்ல பிற நாடுகளிலும் மூலிகை மருத்தவம் தொடர்பான ஆய்வுகள் நடைபெறுகின்றன. இன்றுவரை ஹெச்.ஐ.வி. வைரசை முற்றிலும் அழித்துவிடக் கூடிய மூலிகை இருப்பதாக உறுதிப்படுத்தப்படவில்லை.

எய்ட்ஸ் நோயாளிகளைக் காப்பாற்றுவதில் தமிழகத்தில் உள்ள மூலிகைகள் எந்த அளவிற்குப் பயன்பட கூடும் என்பதைப் பற்றிய ஒரு பரிசீலனையின் விளைவே இந்தத் தலைப்பு.

எய்ட்ஸ் நோயை ஒத்த ஒரு பிரிவு மேக நோயின் குறிகுணத்தை விளக்குகிறது "அகத்தியர் வைத்திய வல்லாதி."

"பட்டமரம் போலாக்கும் வெட்டை மேகம்" என்கிறார் யாகோப்.

இவை எல்லாம் எய்ட்ஸ் என்கின்ற வெட்டை மேகம் ஒரு புதிய நோயல்ல. அதனுடைய பரவலான தாக்குதல்தான் புதுமையானது என்பதைக் காட்டுகிறது.

'வேர்பாரு தழைபாரு மிஞ்சினாக்கால்
மெல்ல மெல்ல பற்பச் செந்தூரம் பாரு'

என்ற நம்முடைய முன்னோர்கள் மூலிகை மருந்துகளை வெட்டை மேகத்தில் பயன்படுத்தியிருக்கக் கூடும். ஆகவே மேக நோய்களில் பல்வேறு நிலைகளில் மருந்தாகச் சொல்லப்பட்டிருக்கின்ற மூலிகைகளை எய்ட்ஸ் நோயாளிகளில் முயன்று பார்த்தால் சாதகமான பலன்கள் விளையக் கூடும்.

எய்ட்ஸ் நோயில் உடலின் நோய் எதிர்ப்பாற்றல் நாளுக்கு நாள் குறைந்து கொண்டே போய் அனைத்துத் தாதுக்களும் சீர் குலைந்து நோயாளி இறக்கின்ற ஆபத்து உருவாகின்றது. ஆகவே உடல் தாதுக்களை அழியாமல் காப்பவை எனக் கருதப்படுகின்ற கற்ப மூலிகைகளிலிருந்து நல்ல பயன் தரக் கூடிய மருந்துகளை உருவாக்க முயல்வதே நம்முடைய அணுகுமுறை. இத்தகைய அணுகுமுறையில் தலையாயதாகக் கருதப்படுவது கற்ப மூலிகைப் பொருளாகிய சேராங்கொட்டை.

இப்போது வழக்கிலும் என்னிடம் எந்த சில எய்ட்ஸ் நோயாளிகளுக்கு சேராங்கொட்டை சேர்ந்த மருந்துகளை வழங்கி வருகின்றேன் அவை.

1. சேங்கொட்டை நெய்
2. மகாவல்லாதி லேகியம்

இவை இரண்டும் மூலிகைப் பொருட்கள் மட்டும் சேர்த்துச் செய்யப்படுகின்ற மருந்துகள்.

"குட்டங் கயரோகங் கொல்லும் விடபாகம்
துட்டந் தருகிருமி சூலையும் போம் மட்டலரும்
கூந்தன் மயிலே கிரந்திக் கூட்டம்போம் செங்கையில்
ஏந்து சேங்கொட்டைதனையே"

சேராங்கொட்டை சேர்த்துச் செய்யப்படுகின்ற இன்னும் சக்தி வாய்ந்த மருந்துகளாகக் கருதப்படுவது

1. இடிவல்லாதி மெழுகு
2. இரசகந்தி மெழுகு
3. நந்தி மெழுகு

கீழாநெல்லி (Phyllanthus Niruri)

"கீழா நெல்லிக் குணந்தான் கேளாய் மதுமேகத்
தாழாக் காமாலைகளைக் சண்ணுந்தா தேழினனலுந்
தொக்கினன லுந்தொலைக்குந் தொன்மேகம் போக்கிவிடும்
தக்கவிரணம் கெடுக்கும்தான்"

கீழாநெல்லி ஏற்கனவே வைரசினால் ஏற்படுகின்ற மஞ்சள் காமாலை நோயில் பயனுடையது என்று மருத்தவ உலகம் ஏற்றுக் கொண்டிருக்கின்றது. சில அறிஞர்கள் கீழாநெல்லியை எய்ட்ஸ் நோயை விளைவிக்கின்ற வைரசுகளுக்கு எதிராகப் பயன்படுத்தலாம் என்று கூறி அதன் தொடர்பாக ஆய்வுகளை நடத்தி வருகின்றார்கள்.

நாமும் வெட்டை மேக நோயாளிகளில் கீழாநெல்லியை வழங்கிருகின்றோம். மேலும் கீழாநெல்லி ஒரு கற்ப மருந்தாகும். உடலைப்பேணக் கூடிய ஆற்றல் அதற்கு உண்டு.

பறங்கிப்பட்டை

மேகப் பிணியை போக்குவதோடு உடல் உரமாக்கிச் செய்கையையும் உடையது. ஆகையால் எய்ட்ஸ் நோயாளிகளில் பயன்படக் கூடியது. இதனை பறங்கிப்பட்டைச் சூரணமாகவோ அல்லது பறங்கி இரசாயனமாகவோ வழங்குவது வழக்கிலுள்ளது.

"தாகம் பலவாதம் தாது நட்டம் புண்பிளவை
மேகங் கடி கிரந்தி வீழ்மூலந் - தேகமுடன்
குட்டை பகந்த மேற் கொள்வமனம் போம்பறங்கிப்
பட்டையினை உச்சரித்துப் பார்".

அறுகம்புல்

எந்தவிதமான குறிகுணமுமில்லாமல் அதே நேரத்தல் ஹெச்.ஐ.வி. பாசிடிவ் என்கின்ற நோயைக் கணிப்போடு வருகின்ற நோயாளிகளுக்கு நான் பரிந்துரைக்கின்ற மருத்துவம் அறுகம்புல் சாறு. திரிபலை மாத்திரை ஹெச்.ஐ.வி. பாசிடிவ் நோயாளிகளில் பயனுடையதாக இருக்கும் என்ற கருத்தினை டாக்டர் ஜே.ஆர். கிருஷ்ணமூர்த்தி அவர்கள் முன்பே ஒரு கட்டுரையில் படைத்துள்ளார்.

குங்கிலியம் (Shorea robusta)

"பெரும்பாடு மேகம் போம் பேரா துடலில்
அரும்பிய புண்ணாறும் இவையல்லாமல் துரும்பாம்
எலும்புறுக்கி புண்சீழும் ஏகும் உலகில்
சலம்பருகுங் குங்கியலியத் தால்"

குங்கிலியத்திலிருந்து செய்யப்படக் கூடிய குங்கிலியப் பற்பம் பயனுடையதாக இருக்கிறது.

தண்ணீர் விட்டான் (Asparagus recemossus)

"நீரிழிவைப் போக்கும் நெடுநாட் சுரத்தையெல்லாம்
ஊரை விடுத்தோட உரைக்கும் காண் நாரியரே
வெண்ணீர்பெய் சோமநோய் வெட்டை அனல் தணிக்குந்
தண்ணீர் விட்டான் கிழங்குதான்"

வெட்டை, மேகம் ஆகியவற்றைப் போக்குவதில் சிறந்தது என்று நம் முன்னோர்கள் பயன்படுத்தி இருக்கின்ற தண்ணீர் விட்டான் நெய் தற்போதும் பயனுடையதாக இருக்கின்றது. எய்ட்ஸ் நோயி[illegible] விளைவுகள் உடலின் பல்வேறு தாதுக்களையும் பாதிக்கின்றது. அதற்கேற்ப குறிகுணங்க[illegible] தோன்றுகின்றன. நம்முடைய மதிப்பீட்டிலும் ஏதாவது ஒரு மூலிகையை வைத்தே வெட்டை மே[illegible] முழுமையாக நோயை குணப்படுத்தி விடலாம் என்ற கருத்துத் தோன்றவில்லை. ஆகவே பெருநோய் (Leprosy), இளைப்பு நோய் (Tuberculosis) இவற்றில் இருப்பதைப் போல் பல்வேறு மருந்துகளைக் (Multi Drug Theraphy) கொண்டு மருத்துவம் செய்வதே பயனுடையதாக கருதப்படுகின்றது.

எய்ட்ஸ் நோயிலேயே 4 நிலைகள் இருக்கின்றன. இதை விரிவாக ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமல்ல. அந்த அந்த நிலைக்கு ஏற்ப மருந்துகள் தேர்வு செய்யப்பட வேண்டும்.

ஆரம்பக் கட்ட நோயாளிகளுக்கு திரிபலை மாத்திரை, மருகம்புல் சாறு இவற்றை வழங்கி வரலாம்.

சுரமும் சேர்ந்து காணப்படுகின்ற நிலையில் கீழா நெல்லி, நிலவேம்புக் குடி நீர் வழங்கி வரலாம்.

உடல் இளைப்பதைத் தடுக்கின்ற வகையில் தேற்றான்கொட்டை இளகம். அமுக்கிரா இளகம். சீந்தில் சர்க்கரை சேர்ந்த அமிர்த சஞ்சீவி லேகியம் இவற்றை வழங்கலாம்.

கழிச்சல் ஏற்படுகின்ற நிலையில் சுண்டைவற்றல் சூரணத்தை மோரில் கலந்து வழங்கலாம்.

நோயில் தோன்றும் வாய்ப்புண்ணிற்குத் திரிபலைக் குடிநீரைக் கொப்பளிக்கச் செய்யலாம். தோலில் தோன்றும் புற்று நோய்க்கு மத்தன் தைலம், குங்கிலியத் தைலம், குங்கிலிய வெண்ணெய் பூசலாம்.

ஹெச்.ஐ.வி. பாசிடிவ் என்று நோய்க் கணிப்புச் செய்த நிலையிலேயே பாதி உயிர் போய் விடுகின்ற நோயாளிகளுக்கு மூலிகை மருத்துவத்தால் சிக்கலைத் தள்ளிப் போடலாம். வாழ்நாளை நீட்டிக்கலாம் என்ற நம்பிக்கையை நம்மால் ஏற்படுத்த முடியும்.

"தெய்வத்தான் ஆகாது எனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்" (குறள்)

காயகற்பம்

டாக்டர் எம். லோகமணியன்
விரிவுரையாளர், அரசு சித்த மருத்துவக் கல்லூரி,
அரும்பாக்கம், சென்னை - 106

சித்த முறையில் உடலின் தன்மையைக் காப்பது காயகற்பம் எனப்படும்.

கற்பம் என்பது உடம்பினை நோயுறாதபடி நன்நிலையில் வைத்திருந்து நரை, திரை, மூப்பு இவற்றையும், பிணிகளையும் நீக்குவதாகும்.

இதன் மூலம் சித்தர்கள் பொய்யென்றும் உடலை மெய்யென நிலைக்கச் செய்தனர்.

இக்காலத்தில் கற்ப முறைகளை நமது உடலைப் பேணவும், பல ஆண்டுகள் உயிரோடு வாழவும், பிணிகளைப் போக்கி உடலைத் தேற்றவும், பிணிகள் வராதபடி தடுக்கவும் பயன்படுத்தலாம்.

மனிதன் உடலைப் பேணல் என்பது முதன்மையானது, இதை திருமந்திரத்தில்,

"உடம்பார் அழியில் உயிரார் அழிவர்

திடம்பட மெய்ஞானம் சேரவும் மாட்டார்

உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே

உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே"

இவ்வாறு உடம்பைக் காப்பது கற்பம் - இது உடம்பைக் கல்போலாக்கும். கல்லினால் செய்த சிலை பன்னெடுங்காலமாயினும் நரை. திரை. மூப்பு. பிணி இவை எய்தாது போலக் கற்பமான உடலும் இக்கேட் அடைவதில்லை, இதனை,

கற்பத்தையுண்டால் காயம் அழியாது

கற்பத்தினாலே காணலாம் கைலையை

கற்பத்தினாலே காணலாம் சோதியை

கற்பத்தினாலே காலையும் கட்டிடே"

என்ற திருமந்திரத்தால் அறியலாம்.

இவ்வாறு கூறப்படும் கற்பத்தினுள், மூலிகை, தாதுக் கற்பம், உடலைக் காக்கும் ஆதனம் முதலி பயிற்சிகளும், பிராணயமும் (வாசி), யோகமும், மூப்பூவும் அடங்கும்.

கற்பங்களாக காணப்படும் சில பற்றி கூறலாம்.

மேலும் கற்பகங்கள் நாள்தோறும் செய்து உண்பது, முன்பே செய்து வைத்திருந்து உண்பது.

மூலிகைக் கற்பப் பொருட்களும், கற்ப யோகங்களும் தேரன் யமகவெண்பா, கருவூரார் வாத காவியம் போன்ற நூல்களில் கூறப்பட்டுள்ளது.

கற்ப அவிழ்த முண்ணுங்காலத்து கடைபிடிக்க வேண்டிய விதி முறைகள்

1. கற்பமுண்ணுங் காலத்து தூயமனத்துடன், பொல்லாப்பு, திருட்டு, கபடு, நீக்கி அடக்கமாக இருத்தல்.

கற்பமூலிகைகள் 108 என கருவூரார் வாத காவியம் கூறுகிறது. அவற்றுள் சில இஞ்சி, பூண்டு, பொன்னாங்கன்னி, வசம்பு, மனத்தக்காளி, அமுக்கினாங்கிழங்கு, உருளைக்கிழங்கு, கையான், கீழாநெல்லி, சீரகம், கடுக்காய், தூதுவளை, சோராங்கொட்டை, சீதேற்றான், துளசி, வல்வம், எலுமிச்சை

மேலும் பஞ்ச கற்பம் என் சிறப்பு முறைப்படி

கஸ்தூரி மஞ்சள்

மிளகு

வேப்பம்வித்து

கடுக்காய்த் தோல்,

நெல்லிப்பருப்பு இவைகளை கிரமப் பிரகாரம் காரம்பசிவின் பால் விட்டரைத்துக் கொதிக்க வைத்து, சிரசில் தேய்த்துக் குளிக்க பிணிகள் வராது. இது பஞ்சகற்பவிதி எனப்படும்.

இஞ்சி - Zingiber officinalis

Sanskrit Name - Adrakam

Constituents :

Aromtic Volatile oil, 1 to 5 pc of light yellow colour having a characteristic odour and containing camphene, phellandrene, zinginberine, cineol, borneol.

Action :

Aromatic, Carminative, stimulant, stomachic, sialagogue

Uses :

Disspepsia, Flatulence, Colic, Vomiting Spasms, and other painful affections of the stomatch and the bowels unattended by fever for cold, cough, Asthma.

Gingiber - Roch salt - Increases the appetite before Meals.

Giner Juiced Mixed Sugar - Candy - BDS

Good remedy for both tyeps of Diabetes

இஞ்சி, தேனூரால், நரை, திரை, மூப்பு, நீங்கும்.

பெருவயிறு - இஞ்சிசாறு ¼ ஆழாக்கில் இருந்து 1S½ ஆழாக்கு (படிப்படியாக உயர்த்தி தரவும்) வரை நோய் நீங்கும் வரை தரவும்.

நீரிழிவு - இஞ்சிசாறு + கற்கண்டு

ஈளை, இருமல் - இஞ்சிசாறு + தேன் + மாதுளம்பழசாறு

வாந்தி - இஞ்சிசாறு + வெங்காய சாறு

இஞ்சி உலர்ந்தபின் சுக்கு எனப்படும்.

சுக்கின் பயன்கள்

1. சுக்கை வாயிலிட்டு மெல்ல பல்வலி போகும்.

2. மூட்டு வீக்கங்களுக்கு இதை அரைத்துப் பூசலாம்.

3. மென்று இதன் சாரம் விழுங்க தொண்டைக்கட்டு, குரற்கம்மல் நீங்கும்.

4. இதனை தாய்ப்பாலில் இழைத்து நெற்றியில் பற்றிட தலைவலி நீங்கும்.

கற்பம் - வேப்பந்துளிர், முதிர்ந்த இலை இடித்து அரைப் பங்கு ஓமம், உப்பு சேர்த்து இடித்து பொடித்து பக்குவப்படுத்தி உரோகிணி நட்சத்திரம் நல்ல நாள் பார்த்து உண்ண உடலுக்கு நன்மை கிடைக்கும்.

சேங்ககாட்டை Semecarpam anacardium

Sanskrit Name - Bhallataka, Bijam

Chemical Constituents

Nut - Small quantity of sweat oil.

Pericarp - The black corrosive jaice (Marking ink) contains a tarry oil consisting 90% of **anaclardic acid. 1**[illegible] Non volatatile alzohol **called cardol Anacardol**

2 Monobasic acids, potassium salt, Diacetyl of hydrobhilawanol (MP to 1°)

Dibesszoyl hydrobhilawanol (M. 59° to 60°)

Monoal trohydrobhilamanol methyl ether (81° - 72°) Diaitrohydrobhiawanol dimethyl ether (M.P. 83°)

Semi carpol (B.P. 185° - 190°)

Bhilawahol (225° - 226°)

Actions :

Oil - Powerful antiseptic, cholagogue

Ripe Fruits - 1. Stimulant, 2. Digestive. 3. Newine tonic. Marking Nut - Gastro intestinal irritant as taken by mouth.

Kesnal is a good nutritive food also appetisa, digestive and caminative. It is a good cardiac tonic. and a general respiratory stiamulant.

இது சித்த மருத்துவத்தில் பெருநோய், இளைப்பு, நஞ்சுகள், சூலை, இவைகளை போக்கும். திமிர் படை, கரப்புப் படை, வெண்படை, தீராக்கடி, மூலம், வளி நோய்கள் குன்மம் இவைகள் விலகும். இரத்தால் தீரும் பெரு நோய்கள் இதனால் நீங்கும்.

தேரன் கரிசில் வரும் தேரண் இலேகியம் உண்ணின் அழகும், பசியும் உண்டாகும்.

பூண்டு

Batanical name - Alluium sativam

Sanskrit Name - Lasuna

Chemical constituents :

An acrid volatile oil which is the active principle, starch, mucilage, albumen sugar et. volatle essentail oil (0.25%) obtained by distilling the brushed bulbs conting allyl, propyl disulphide and other organic sulphides (or) sulphur compounds.

Action 8 Uses :

Hot, Stimulant, carminative, anti-Rheumatic, anthelmintic & alterative.

uses : Branchial 8 asthmatic complaints.

Typhoid (Given early in typhoid fever it will almost Diptheria abort the disease).Protect the human body from the attacs of bacteria and bacillae in times of epidemics.

Blood purifier.

Remove the all parasites in the intestine. The oil from seeds used internally & also externally. It's used paralytic & Rheumatic affections. Externally the juice used in infantile convustions.

Other nervous and spasmodic affections, relaxed sorethroat, in asthama, general paralysis. Facial paralysis, goat, sciatica and skin disease including leprosy.

Garlic is applied externally for Deafness 8 pain. Garlic Juice + distilled water - washing wounds & Foul ulcers.

பூண்டுத்தேன் - பூண்டுச்சாறு + தேன் = Tonsilitis (**லசுனத்தாபிதத்திற்கு தடவலாம்**)

பூண்டின் மறுபெயர், சமஸ்கிருதப் பெயரும் லசுனம் என்பதாகும்.

தோற்றான் Strgchonos Potatorum

Sanskrit - Kataka

Constituents : Seeds contian no strychine but bacine is present

Actions : Seeds are alterative, tonic, stomachic, demulcu

Uses :

1. Seeds are used to clarify foul & Muddy water

2. Powder of seeds a milk - Internally - irritation of grinary organ & gonorrhoea.

3. Remedy in Diabetes.

4. Seeds rubbed ups honey of a little camphor into a paste is a favourite remedy valdya & hakins applied to the eyes in chemosis of the conjuntiva and lachrymation (or) capius watery discharge from them.

"தேற்றான் விதை சூரணம் நீர் - நீர் சுருக்கு, வெட்டை

தேற்றான் கொட்டையிட்டு தேற்று மைந்தரை"

உடல் ஊட்டம், ஆண்மை பெருக பயன்படுகிறது நீரிழிவிற்கு - தேவிதை கடுக்காய், ஆவாரை விளாம்பிசின் பசு மோர் 1 நாளைக்கு 1 முறை பருகவும். தேற்றான் வேர், விரை, பட்டை, இலை, கனி, காய் இவற்றை பத்தியத்துடன் சாப்பிட பாண்டு, பெருவயிறு, மூலம் பெரும்பாடு, சோகை, மேக உஷ்ணம் நீங்கும்.

மணத்தக்காளி : Solanum nigrum

Sanskrit Kakamachi

Constituents : 'Solanine' - which is a compound of sugar, saponin, Solanidine - an alhadoid having the property of diating the pupils.

Action : Alternative, sedative, diaphoretic, diaretic, expertorant.

Uses : Heart disease Rheumatic & gouty joints remedy for skin diseases, recommended in dropsy chronic eirrhosis of liver & spleen, gonorrheen.

1. இலைச்சாறு - 30

நீர்பாண்டு உட் சூடு தீரும்

2. இதில் செய்யப்படும் தைலம் - இரைப்பு, இருமல் நீங்கும் (சித்தர் உரை விளக்கம்)

3. வற்றல் - சுவையின்மை நீங்கம்

4. இதன் காய், கனி, இலை, வேர் இவற்றை வற்றல், குடிநீர் செய்து சர்ப்பிட உடல் நலம் பெறும்.

இதுபோன்ற பல காயகற்ப மருத்துவ முறைகள் சித்த மருத்துவத்தில் சிறப்பாக கூறப்பட்டுள்ளன.

அவற்றைப் பின்பற்றி நோயற்ற வாழ்க்கையை மேற்கொள்வோமாக.

இல்லந்தோறும் மூலிகைகள்

டாக்டர் அ. வாசுகி தேவி B.A., B.S.M.S., Dip. in Manus
உதவி மருத்துவ அலுவலர் - அரசினர் ஆரம்ப சுகாதார நிலையம்
கட்சூர், சீத்தஞ்சேரி Post, ஊத்துக்கோட்டை (வழி) செங்கை எம்.ஜி.ஆர். மாவட்டம்
அஞ்சல் குறியீட்ட எண் - 602 026

நாம் நம் இல்லந்தோறும் பல்வேறுவிதமான மூலிகைகளை உணவு மற்றும் மருத்துவத்திற்காகப் பயன்படுத்துவதுடன் அழகு மற்றும் மணத்திற்காகவும், நிழலுக்காகவும், சமயப் பழக்கம் காரணமாகவும் சிலவற்றை வீட்டிலும், சுற்றப்புறத்திலும் வளர்க்கிறோம். இல்லந்தோறும் மூலிகைகள் என்பதால் நமக்கு நன்கு பழக்கமான அன்றாட வாழ்வில் பயன்படுத்தக் கூடியவற்றை, மீண்டும் அவற்றின் மருத்துவ நன்மைகளை நினைவுபடுத்துவதுடன், சித்த மருத்துவத்தில் அதன் முக்கியத்துவத்தையும், ஒருசில தற்கால ஆய்வுக் கருத்துக்களையும், கூறுவதுடன் சித்த மருந்து பெயர்களை கூறினால் மருத்துவர் அல்லாதார் புரிந்து கொள்வது கடினம் என்பதால், சில அனுபவ முறைகளைப் பற்றி மட்டும் சொல்கிறேன்.

உணவே மருந்து, மருந்தே உணவு என்பது சித்த மருத்துவக் கோட்பாடுகளில் ஒன்று. சிலவற்றை நாம் உணவிற்காகப் பயன்படுத்தும்போது, மருத்துவ நன்மையைத் தரக் கூடியதாகவும், சிலவற்றை மருந்தாகப் பயன்படுத்தும்போது உணவாகவும் அமைகிறது. சிலமூலிகைப் பொருட்கள் உணவோ அல்லது மருந்தோ தயாரிப்பதில், முக்கிய பொருளாகவோ அல்லது துணைப் பொருளாகவோ பயன்படுத்தப்படுகிறது. ஆகவே நாம் உணவில் பயன்படுத்தக். கூடிய ஒவ்வொரு பொருளும் ஏதாவது ஒரு விதத்தில் நம் உடல் நலத்தைப் பேணிக் காப்பதில் சம்பந்தப்பட்டிருக்கிறது. (உ.ம். ஆக மஞ்சள் இஞ்சி, சுக்கு, வெந்தயம், மிளகு, பொன்னங்காணி.

அசோகு, மருதோன்றி, பவளமல்லிகை போன்றவற்றை அழகுக்காகவும், நல்ல வாசனைக்காகவும், வேப்பமரம், புங்கமரம் போன்றவற்றை நிழலுக்காகவும், துளசி, வில்வம் போன்றவற்றைச் சமய பழக்கம் காரணமாகவும், நம் வீட்டில் வளர்க்கிறோம். காரணம் எதுவாக இருப்பினும், இவை எல்லாம் மருத்துவத் தன்மை உடையதே. காலம் கருதி உணவில் நாம் பயன்படுத்தக் கூடிய ஒரிரு மூலிகைப் பொருட்களை சற்று விரிவாகவும், மற்றவற்றின் ஒரிரு மருத்துவப் பயனை மட்டும் கூறுகிறேன்.

நாம் பழக்கம் காரணமாக சிலவற்றின் முக்கியம் அறியாமலே பயன்படுத்துகிறோம். எதை? எப்போது, எப்படி? எவ்வளவு என்று அறிந்து பயன்படுத்தினால் உடல்நலத்தை நல்ல முறையில் பாதுகாக்கலாம்.

மஞ்சள் முகமே வருக என்ற பழைய பாடலையும், இஞ்சி இடுப்பழகி, மஞ்சள் முகத்தழகி என்ற பாடல்களைக் கேட்கும்போது, நமக்கு மஞ்சள் ஞாபகம் வரும். மஞ்சள் என்று சொல்லும் போது, மங்களம் என்ற கருத்து நம்மிடை உண்டு. பிறப்பு முதல் இறப்புவரை நம் வாழ்வில், உணவு, மருத்துவ, சமய பழக்க வழக்கத்தில் முக்கிய பங்கு வகிக்கிறது. ஆகவே மங்களமான மஞ்சளையே முதலில் பார்க்கலாம்.

மஞ்சள் (CURCUMA LONGA LINN)

பொன்னிறமாம் மேனி புலானாற்ற மும்போம்
மன்னுபுருட வசியமாம் - பின்னியெழும்
வாந்தி பித்ததோடம் ஐயம் வாதம்போம்...

மேலும்,

தலைவலி நீரேற்றம் சளையாத மேகம்
உலைவுதரு பீநசத்தி னூடே - வலி சுரப்பு
விஞ்சு கடிவிடமும் வீறு வரணங்களும் போம்...

மேலும்,

மஞ்சள் குளிதனக்கு மாருத்துர்க் கந்தமொடு
விஞ்சுமுக சாட்டியமும் விட்டகலும்

(அ.கு.)

என்பதிலிருந்து, மருத்துவ நன்மையுடன், அழகுக்கலையில் இதன் முக்கியத்துவத்தினை அறியலாம்.

சிலர் நம் பக்கத்தில் வரும்போதே செமநாற்றம் வீசும். இதை கற்றாழை நாற்றம் என்பர் சிலர். இதற்கு மஞ்சளை நீர் விட்டரைத்துப் பூசி குளிக்க நல்லகுணம் கிடைக்கும். முக அழகுக்காக கண்டகண்ட கிரீம்களை வாங்கி பணத்தையும், நேரத்தையும், முகசர்மத்தையும், கெடுத்துக் கொள்வதற்குப் பதிலாக, ஹெர்பல் காஸ்மடிக்காக, மஞ்சளை பூசுவதால், முக சர்மம் பாதுகாக்கப் படுவதுடன், அழகும் உண்டாகும்.

இன்றும் நான் வேலை செய்யும் கட்சூர் கிராமத்தில் புண்களுக்கு மஞ்சள் பொடி தூவுகிறார்கள்.

சுடுசாதத்துடன் மஞ்சளைச் சேர்த்தரைத்து கட்டிகள் மீது வைத்துக் கட்ட அவைகள் பழுத்து உடையும். நகச் சுற்று போன்றவற்றிற்கும் இவ்வாறு செய்ய, வலி குறையும். ஜலதோசத்தினால் ஏற்படும் மூக்கடைப்பிற்கு மஞ்சளை சுட்டு முகர, காப்பிநிற சளி வெளியாகி உடனே நிவாரணம் தெரியும். இரவில் இவ்வாறு செய்வதால் சில மணிநேரம் மூக்கடைப்பு நீங்கும். தூக்கம் ஏற்படும் ஹிஸ்டிரிக்கல் வலிப்பிலும் இவ்வாறு செய்ய பலன் தரும்.

அம்மைக் கொப்புளத்திற்கு வேப்பிலையுடன், மஞ்சள் சேர்த்தரைத்துப் பூச அவை எளிதில் ஆறுவதுடன் மேற்கொண்டு அதிகமாகாமல் அரிப்பும் அடங்கும்.

சொறி, சிரங்கு, நமைச்சல் முதலியவற்றிற்கு ஆடாதொடை இலையுடன் மஞ்சள் சேர்த்து பசுமூத்திரம் விட்டு அரைத்து பூச நல்ல நிவாரணம் தெரியும்.

காமாலை நோய்க்கும் மஞ்சள் நீர் தரலாம். (Viral Hepatitis)

மஞ்சள் நீரில் தோய்த்த வெள்ளைத் துணியை நம் மெட்ராஸ் ஐ க்குக் கண்துடைக்கவும், கண்ணில் நீர்வடிதலில் (Purulent Opthalmia) பயன்படுத்தலாம்.

திப்பிலி, மிளகு, சுக்கு, ஏலம் இவற்றுடன் மஞ்சள் சேர்ந்த சூரணம் நல்ல ஜீரணத்தை உண்டாக்கும்.

தயாரித்து விற்கப்படும் மருந்தில் குங்குமாதி லேபம் முகச் சரும பாதுகாப்பில் நன்றாக செயல்படுகிறது. நீர்கோர்வை மாத்திரை, அரக்குத்தைலம் என்ற பல சித்த மருந்துகளில் மஞ்சள் பயன்படுத்தப்படுகிறது.

தற்காலத்தில் மஞ்சளில் குர்குமீன் என்ற நிறப் பொருளும், டர்மரிக் ஆயிலும் உள்ளது அறியப்பட்டுள்ளது. குர்குமினுடைய வீக்கம் முறிக்கும் தன்மை கார்டிசோன் மற்றும் பினைல் புடோசோனுக்கு இணையாக இருப்பதை எலியில் கண்டறியப்பட்டுள்ளது. ஈரலைப் பாதுகாக்கும் தன்மையும் மற்றும் செப்டிக், ஏசெப்படிக் புண்களில் மஞ்சள் பூசுவது விரைவில் புண் ஆறும் தன்மையும் வாத நோயில் கொடுத்ததில் பக்கவிளைவு இல்லாமையும் அறியப்பட்டுள்ளது.

இஞ்சி (ZINGIBER OFFICINALE) (GREEN GINGER)

இஞ்சிக் கிழங்குக் கிருமல் ஐயம் ஒக்காளம்

வஞ்சிக்குஞ் சந்நிசுரம் வன்பேதி - விஞ்சுகின்ற

சூலையறும் வாதம்போந் தூண்டாத தீபனமாம்..

என்பதிலிருந்து, சீரணக் கோளாறினால் ஏற்படும் நோய்களிலும், வாத நோய்களிலும், இஞ்சியின் முக்கியத்துவத்தை அறியலாம்.

பெருவயறு என்கின்ற நோயில் (Ascities - Cirrhosis of Lines-Dropsy) இஞ்சிச்சாறு நல்ல பலன் தருகிறது.

இஞ்சி சட்னி, இட்லி என்னும் போதே, நம் நாக்கில் நீர் ஊற ஆரம்பிக்கும். இஞ்சிச் சட்னி,

ஊறுகாய், மொரப்பா, போன்றவற்றை வாந்திக்கு தரலாம். இன்னும் முக்கியமாக திருநெல்வேலி பக்கத்தில் வயிறு ஒரு மாதிரி இருந்துச்சு அதனாலே இஞ்சி தட்டி போட்டு குடிச்சேன் என்பார்கள். வயிற்றிலிருந்து காற்று வெளியேறும்.

குரல் கம்மலுக்கு இஞ்சியை வாயில் மென்று உமிழ்நீரைத் துப்ப, ஹால்ஸ் மிட்டாய் சாப்பிட்டதுபோல் இருக்கும்.

இஞ்சிச்சாறு, மாதுளம்பூச்சாறு, தேன் சமன் எடை கலந்து வேளைக்கு 30 மி.லி. வீதம் சாப்பிட்டவர இருமல், ஈளை நீங்கும்.

இஞ்சிச் சாறு எடுக்கும்போது அடியில் தங்கும் மாவு போன்றவற்றைப் பயன்படுத்தக் கூடாது.

ஈரல் வீக்கத்திலும் (Viral Hepatitin) மிளகு, திப்பிலியுடன், இஞ்சியை சேர்த்துப் பயன்படுத்த பசியைத் தூண்டி பித்தத்தை சமப்படுத்தும். இஞ்சியை தேனூறல் செய்து காயகற்பமாகப் பயன் படுத்தலாம்.

ஜின்சரின் என்கின்ற மாவுப் பொருளும், வோலட்டைல் ஆயில், ரெசின் பொருள், மியுசிலேஜ் ஆகியவை மஞ்சளில் உள்ளது அறியப்பட்டுள்ளது. வீக்கம் குறைக்கும் தன்மையும், ஆன்டி ஹிஸ்டமின் தன்மையும், ஆன்டி ருமாட்டடிக் தன்மையும் நிரூபிக்கப்பட்டுள்ளது.

சுக்கு :

உலர்ந்த இஞ்சி சுக்கு ஆகும்.

சுக்குக்குப் புறநஞ்சு
கடுக்காய்க்கு அகநஞ்சு என்பதால் சுக்கை தோல் நீக்கியே பயன்படுத்த வேண்டும்.

சுக்குக்கு மிஞ்சிய மருந்துமில்லை
சுப்பிரமணியத்திற்கு மிஞ்சிய தெய்வமும் இல்லை என்பதிலிருந்து சுக்கின் பெருமையை அறியலாம்.

செரியாமை, புளியேப்பம், இரைப்பு, இருமல், குன்மம், வயிற்றுப்பிசம், தலைநோய், வயிற்றுக் குத்தல், கீழ்வாத நோய், பாண்டு, தலைநீரேற்றம் முதலியவற்றில் இஞ்சியைப் பயன்படுத்தலாம்.

காதியினால் சுக்குக் காப்பியும், சுக்குப் பவுடரும், சாதாரண மக்களிடையே மட்டுமன்றி, மேட்டுக் குடியினரிடமும் நன்கு அறிகமாகி உள்ளது.

தலைவலிக்கு சுக்குப் பற்று கைகண்டதாகும்.

இன்றைக்கும் நம் சென்னையில் கரும்புச் சாறுடன், எலும்பிச்சம் பழம், இஞ்சி சேர்த்து குடிக்கிறோம். இதனால் வயிற்றெரிச்சல் நீங்கும். காமாலை நோயில் கரும்புச் சாறு மிகவும் நல்லது.

கடுமையான பல்வலியில் துன்பப்படுபவர்கள், சுக்கை மென்று வலியுள்ள பக்கம் அடக்கிக் கொள்ள வலி நீங்கும். இன்றைக்கும் என் கிராமத்தில், மூட்டு வீக்கத்திற்கு அல்லது அடிபட்ட வீக்கத்திற்கு, சுக்கு மட்டுமாவது அல்லது சர்க்ரை சேர்த்தாவது, பற்றுப் போட்டு வருதல் உண்டு.

சித்த மருத்துவர்கள் தினமும் சுக்கு சேர்ந்த ஏதாவது ஒரு மருந்தினை பயன்படுத்தியே வருகின்றனர். (உம். திரிகடுகு சூர்ணம், அழுக்கிராச் சூர்ணம்)

வெந்தயம் (TRIGONELLA FOENUM GRACCUM LINN)

வெந்த + அயம் = வெந்தயம். பெயரிலே இதில் இரும்புச் சத்து உள்ளதை அறியலாம். நவீன முறைப்படி ஆய்வு செய்ததிலும் இதில் எளிதில் சீரணமாகக் கூடிய ஆர்கானிக் அயன் இருப்பது அறியப்பட்டுள்ளது.

என்ன கமகமன்னு வாசனை வருது, என்றும், அப்பா வாசனை மூக்கைத் துளைக்குது என்றும் சிலர் செல்வதுண்டு. புளியோதரை ரசப்பொடி இவற்றில் வாசனைக்காக நாம் சேர்த்தாலும், நல்ல மருத்துவ குணம் நிறைந்ததாக உள்ளது. நம் முன்னோர்கள், எதையும் நன்மை கருதியே, பலமுறைகளில் சில பழக்கங்களை புகுத்தி உள்ளனர்.

வெந்தயக் கீரையை தாளிப்பதற்கும், சமைத்து சாப்பிடவும் பயன்படுத்தலாம். இதனால்

சுவையின்மை, வயிற்றுப்பாசம், மாந்தம் தீரும்.

பிள்ளை கணக்காய்ச்சல் பேதிசீ தக் கழிச்சல்
தொள்ளை செய்யும் மேகம் தொலையுங்காண் - உள்ளபடி
வெச்சென்ற மேனிமிகவும் குளிர்ச்சியதாம்.

என்பதிலிருந்து சீதபேதி, நீரிழிவு நோய்களில் நல்ல பலன் தரக்கூடியதை அறியலாம்.

கீரையை வேக வைத்து கடைந்து தேன்விட்டு சாப்பிட மலம் போகும். இது மூல வியாதி உள்ளவர்களுக்கு நல்லது.

கீரையை வேகவைத்து கடைந்து வெண்ணெயுடன் சாப்பிட பித்தமயக்கம் தீரும். வெந்தயக்களி பொதுவாக பெண்களுக்கு ஏற்படும் இடுப்பு வலிக்கு நல்லது. பூப்படைந்த பெண்களுக்கு, உளுந்து, வெந்தயக்களி தருவது நம் பழக்கமாகும்.

ஓமகுச்சி மாதிரி இருப்பவர்கள் வெந்தயம் தோசையாய் வேண்டி உண்டிட உடல் பருக்கும்.

இரத்தத்தில் இரத்தச் சிவப்பணுக்கள் குறைந்தவர்கள் வெந்தயத்தைப் பயன்படுத்தலாம். பால் இல்லாத தாய்மார்களுக்கு கஞ்சியில் சேர்த்துக் காய்ச்சி கொடுக்க பால் சுரக்கும்.

வெந்தயத்தை அரைத்து தலையிலப்பி ஊறவைத்து தலைமுழுகி வர முடி வளரும். முடி உதிர்வதைத் தடுக்கலாம்.

வெந்தயத்தில் ஆல்காலாய்டு (Trigonelline, Trigo Coumenin, Trimethyl Coumenin) மற்றும் நிகோடினிக் அமிலம், மியுசிலேஜ் உள்ளது. நிகோடினிக் அமிலம் இருப்பதால் பெல்லகரா நோயில் கொடுத்துப் பார்க்கலாம்.

வயிற்று புண்ணையும், கொழுப்புச் சத்தைக் குறைக்கும் தன்மையும், வீக்கம் முறிக்கும் தன்மையும் (எலியில்) கண்டறியப்பட்டுள்ளது.

வாத நோயில் பயன்படுத்தப்படுகிறது. (Keelvayu - Rheumatic disease and Spondylosin)

மிளகு :

பத்து மிளகு இருந்தால் பகைவன் வீட்டிலும் உண்ணலாம் என்பர். விஷம் நீக்கும் தன்மையில் மிளகுக்கு நிகர் மிளகுதான்.

வரலாற்றுச் சிறப்பும் உடையது. டயஸ்காரிடஸ் மற்றும் பிளினி போன்றோர் (1st c B.C.) இந்தியாவிலிருந்து வியாபாரம் நடந்ததை குறிப்பிட்டுள்ளனர். உலகம் முழுவதும் நாட்டுப்புற மருத்துவத்தில் (Folk Medicine) பயன்படுத்தப்படுகிறது.

சீதசுரம் பாண்டு சிலேத்துமழங் கிராணி குன்மம்

வாதம் அருசிபித்தம் மாமூலம் - ஓதுசந்தி

...... காசமிவை, என்பதன் மூலம் குளிர்சுரம், இரத்தச் சோகை, வாத நோய், சுவையின்மை, செரியாமை, காமாலை, மூலம் முதலியவைகளில் பயன்படுத்தப்படுகிறது.

மிளகுத்தூள், வெங்காயம், உப்பு சேர்த்தரைத்து தலையில் காணும் புழுவெட்டுக்கு பூஞ்சையில் பூசலாம்.

மிளகில் வோலடைல் ஆயில் (Crystaline Alkaloid, Piperine, Piperidine) போன்றவை உள்ளது அறியப்பட்டுள்ளது.

இது சிறிது சுரம் நீக்கியாகப் பயன்படுகிறது. (Anthelmintic Activity Against Castoder)

பழத்திலிருந்து எடுக்கப்பட்ட சத்திற்கு சில புழுக்களைக் கொள்ளும் தன்மையும், பழத்தில் இருக்கும் வோல்டைல் ஆயிலுக்கு பூஞ்சையை அழிக்கும் தன்மையும், மத்திய நரம்பு மண்டலத்தை மந்தப்படுத்தும் தன்மையும் முயலில் அறியப்பட்டுள்ளது.

சித்தமருத்துவத்தில், விஷம் நீக்கப் பயன்படுத்தம் அனைத்து மருந்துகளிலும் ஓரளவிற்கு பயன்படுத்தப்படுவதுடன், சுவாச குடோரி, கழற்சி சூரணம், சிவனார் அமிர்தம் போன்ற உள் மருந்துகளிலும் துணைமருந்துப் பொருளாக சேர்ந்துள்ளது.

பொன்னாங்காணி : (Alternanthera Sessilis)

பொன் + ஆம் + காண் + நீ = உண்டால் உடல் பொன்னாகக் காண்பாய் எனப் பொருள்படும். இக்கீரையில் தங்கச் சத்து உண்டென்றும், தங்கம் போன்ற மேனியைத் தரும் என்பர். உடலுக்கு வன்மையைத் தரும்.

சித்த மருத்தவத்தில் பல்வேறு சத்துள்ள பல்வேறு மூலிகைகள் உண்டு. (உம்.) கோவை, செந்தராவில் - செம்புச் சத்தும், வேலிப்பருத்தி, சீந்தில் சிறுபீளையில் காரியச் சத்து உண்டென்பர். பொன்னாங்காணியும் காய கற்ப மூலிகைகளில் ஒன்று.

சீதையை நாடொறுஞ் சீரண உண்டிடக்

காதைசேர் நோயலாங் காதம் ஓடிடுமே

(தே.க.)

என இதன் பெருமை கூறப்பட்டுள்ளது. காமாலை நோய்க்கு மற்றும் கண் சம்பந்தமான நோய்களில் சமைத்து தரலாம். பொன்னாங்காணி தைலம் தலைமுழுக கண்குளிர்ச்சி பெறும். கரிசாலை போன்றவற்றுடன் சேர்த்து தைலம் தயாரிக்கப்படுகிறது. சித்த மருத்துவத்தில் உள்ளுக்கும் தரப்படுகிறது.

அசோகு :

என்ன அசோக வனத்து சீதை மாதிரி இருக்கே அப்படின்னு நம் பிரண்ட்ஸ் சிலரை கேலி செய்வதுண்டு. ராமாயணம் சீதை அசோக வனத்தில் இருந்ததை குறிப்பிடுகிறது. சீதை என்ற பெண் அசோக வனத்தில் இருந்ததாலோ என்னவோ பெண்களின் கருப்பை சம்பந்தமான நோய் நிவர்த்தியில் சித்த மருத்துவத்தில் பயன்படுத்தப்படுகிறது.

பூவை நுண்ணியதாய்ப் பொடித்து, சிறிது எடுத்து ஆழாக்கு நீருடன் கலந்து கொடுக்க குருதிக் கழிச்சல், சீதபேதி நீங்கும்.

பட்டையை இடித்து பிழிந்த சாறு ஒரு உச்சிகரண்டி கொடுக்க பெரும்பாடு என்னும் குருதிப்பெருக்கு நீங்கும். பட்டைக் குடிநீரும் தரலாம்.

வாத பித்த சேத்தும வரிசை பெறு மூவருக்கும்

ஆதரவாய் மெய்யில் அமருமே

என்பதிலிருந்து, வாத, பித்த, சேத்தும் என்னும் மூவகை உடலினருக்கும், வன்மையை தரக்கூடியது.

கருப்பையிலிருந்து ஏற்படும் குருதிப் பெருக்கில் (பெரும்பாட்டில்) (MENORRHAGIA) நீரிழிவு மற்றும் ரத்தபேதி, ரத்த மூலத்தில், வெள்ளை படுதலில் (பெண்களுக்கு) நல்ல பலன் தரக்கூடியது.

தற்காலத்தில் பட்டையில் டேனின், ஸ்டிரால், ஆர்கானிக் கால்சியம் போன்றவை அறியப்பட்டுள்ளன. ஆக்ஸி டோசிக் செய்கை மனிதர்களிலும் எலியிலும் கண்டறியப்பட்டுள்ளது. பக்க விளைவு இல்லாதது.

தயாரித்து விற்கப்படும் மருந்துகளில் அசோகரிஸ்டம், இருதம் (நெய்) போன்றவை மருத்துவர்களால் அதிகம் பயன்படுத்தப்படுகிறது.

மருதோன்றி : (LAWSONIA ALBA)

அழகுக்காக நம் நாட்டில் பெண்கள் பயன்படுத்துகிறார்கள். எகிப்து நாட்டில் துவர்ப்பியாகவும், கிரேக்க மற்றும் அரேபிய மருத்துவர்கள் வாய்ப்புண், வீக்கத்திலும் பயன்படுத்துகிறார்கள்.

இலையை உள்ளங்காலில் தேய்க்க அல்லது காடி, எலுமிச்சம் பழச்சாறு விட்டு உள்ளங்காலில் கட்ட பாத எரிச்சல் நீங்கும்.

நகப்புண், புண், சுளுக்கு இவைகளுக்கு இலையை சதைத்து கட்டலாம். நகம் சம்மந்தப்பட்ட நோய்கள் வராமல் தடுக்க (Particularly Fungal infection in nails) பயன்படுத்தலாம். நோய் வந்தபின் தடுக்கவும் பயன்படுத்தப்படுகிறது.

காசுக்கட்டி, அவுரி, மருதோன்றி சேர்த்து தற்காலிக முடிச்சாயமாக (Hair Dye) பயன்படுத்தலாம்.

ஆத்தலெட்ஸ் பூட்டில் (Athelets foot) நல்ல உபயோகமாக உள்ளது. காமாலை மற்றும் ஈரல் வீக்கத்தில் வேர்ப்பட்டை ஊறல் குடிநீர் நல்லது.

இலையில் கரையக்கூடிய பொருள், டேனின், ஹேலிக் ஆசிட் குளுகோஸ் உள்ளது. இலையை ஆல்கஹாலுடன் சேர்த்து எடுத்த சத்திற்கு ஸ்டெபிலோகாக்கஸ் மற்றும் ஈகோலை, பூஞ்சைகளை அழிக்கும் தன்மை அறியப்பட்டுள்ளது. ஆதகத்திலிருந்து வெளியாகும் அதிக குருதியை தடுக்கும் தன்மை கண்டறியப்பட்டுள்ளது.

கோயில் இல்லாத ஊரில் குறியிருக்க வேண்டாம் என்பது பழமொழி. மரம் இல்லாத வீட்டில் குடியிருக்க வேண்டாம் என்பதை புதுமொழியாக கொள்ளலாம். வேப்பமரத்தின் (AZADIRACHTA INDICA) முழு உறுப்பும் மருத்துவத்தில் பயன்படுகிறது. வேப்பமரத்தினைப் போன்று புங்கமரம், மாமரம் என்று பலமரங்கள் முழுவதும் மருத்துவத் தன்மை உடையதாக உள்ளது.

மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்

பெருந்தகையான் கண்படின் - குறள்

என்று வள்ளுவரும், முழுவதும் மருந்திற்குப் பயன்படக் கூடிய மரத்தை, கூறியிருப்பது, இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

கிருமிகுட்ட மாந்தம் கெடுவிட நஞ்சுரங்கள்

பொருமிய சூலிகையின் புண்கள்...

புத்தியிகைத் தீட்டுவிக்கும் புண்பிணியை யோட்டுவிக்கும்

இந்தியத்தை நன்றாக யிசைவிக்கும்...

என்பதிலிருந்து பல்வேறு நோய்களுக்கு வேப்பமரம் பயன்படுத்தப்படுவதை அறியலாம்.

இலைக்குடிநீர் துட்டபுண்களை கழுவப் பயன்படுத்தலாம். இலையை அரைத்து அம்மை நோயில் பூசுவது மிக்க பலனைத் தரும். சித்த மருத்துவத்தில், வாந்தியை நிறுத்தக்கூடிய குடிநீரில் வேப்பிலை ஈர்க்கு பயன்படுத்தப்படுகிறது. பூவை ரசம், துவையல், மற்றும் குழம்பு வைத்துச் சாப்பிட பித்தம், ருசியின்மை நீங்கும்.

பழ ரசத்தை மணப்பாடு செய்து தோல் நோய்களுக்குத் தரநன்மை செய்யும்.

வேப்ப எண்ணையை காயவைத்து வாதநோய்களுக்கு, எருக்கிலை கொண்டு ஏற்றடமிடலாம். வேப்பம்பட்டை பெரும்பாலும், குடிநீர் மற்றும் தைலத்தில் சேர்க்கப்படுகிறது. கரப்பான், சிரங்கு போன்றவற்றிற்கு இலை கொண்டு செய்யும் மருந்துகள் பயன்படுகிறது.

இன்றும், கிராமப்புறங்களில் கொசுக்களை மற்றும் பூச்சிகளை விரட்ட, வீடுகளில் வேப்பிலை புகை போடுவது வழக்கமாக உள்ளது.

கள்ளில் சுக்ரோஸ், குளுகோஸ், புரோட்டின், அயன், கால்ஸியம், பொட்டாசியம் இருப்பதால், உடல் வன்மை படுத்தக்கூடிய டானிக்காக பயன்படுத்தலாம்.

டர்பனாய்டு, ஆல்ஹலாய்டு, ப்ளேவராய்டு,. மார்கோசிக் ஆசிட், நிம்பின், நிம்பிடின், நிம்பிசிடின் போன்றவை பிரித்தெடுக்கப்பட்டுள்ளது.

எசன்சியல் ஆயிலுக்கு ஸ்டெபிளோகாகஸ், ஈகோலை போன்ற பாக்டீரியாவை அழிக்கும் தன்மையும், குளோரபாம்க்கு (Extrat of Neam oil) தோலில் ஏற்படும் பூஞ்சையை அழிக்கும் தன்மையும். இலைக் கொழுந்துக்கு (அக்குவஸ் எக்ஸ்ரேசன்) சர்க்கரையை குறைக்கும் தன்மையும் அறியப்பட்டுள்ளது.

நாட்பட பயன்படுத்தினாலும் எந்தவித ஒவ்வாமையும் (Skin Alergy) ஏற்படுவதில்லை. பல் பாதுகாப்பில் பலங்காலம் தொட்டு இன்றுவரை முக்கிய பங்கு வகிக்கிறது. நிக்கோடின் தயாரிப்புகள் எல்லாம் தோல் நோயில் நல்ல பலனைத் தருகிறது. எலியில் இலையினை பயன்படுத்தியதில் (Infra peritoncal) கொழுப்புச் சத்து குறைந்தது அறியப்பட்டுள்ளது.

இவ்வாறு நோய் தடுப்பதில் மட்டும் அல்லாது நோய் நீக்குவதிலும் முக்கிய பங்கு வகிக்கிறது.

துளசி, வில்வம் போன்றவை சமய பழக்கமாக நாம் வீட்டில் வளர்த்தாலும், மிக்க மருத்துவப் பயன்களுடையதே. நம் இல்லந்தோறும், நாம் வளர்க்கும் செடி, மரங்களை, எந்த நேரத்தில், எவ்வளவு, எப்படி நம் உடல் நலத்தைப் பேணிக் காப்பதில் பயன்படுத்தலாம் என்பதை அறிந்து பயன்படுத்தினால் இல்லந்தோறும் நன்மை விளையும்.

MEDICINAL USAGES OF PLANTS AND THEIR SIGNIFICANCE

R.S. AZHAKIAMANAVALAN
AND
K. RAJAMANI
HORTICULTURAL RESEARCH STATION
YERCAUD - 636 602.

Medicinal plants continue to be an important source of drugs throughout the world. There has been a perceptible revival of the use of herbs in health care programmes even in developed countries. This has happened because of continuous introduction of a large number of synthetic drugs and antibiotics by pharmaceutical companies, resulting in wide spread toxicity associated with the use of such drugs. Today in the developed countries of the West, more than 25 per cent of the formulations contain plant products. There has also been considerable increase in the sale of herbal teas and health foods throughout the west, where people in general prefer to use natural products in place of synthetic ones.

Although no commercial survey has ever been made on the extent of production of medicinal plants in India, the export from this sector is reported to account for Rs.100 crores annually. There are over 5,000 small and medium scale manufacturing units for drug formulations based on raw materials of plants origin which together is estimated to use anywhere between Rs. 300 to Rs. 500 crores worth of raw materials.

Plants as scurces of drugs are much more important for the developing countries of Asia, Africa and South America. More than 85 per cent of the people of these countries are dependant on traditional medicine, which derives more than 90 per cent of the medicaments from higher plants. During the past, most of the raw materials have been derived from natural growth inforests and this often led to the destruction of forests, loss of germplasm and extinction of species. It has now been realised that the best way to conserve the valuable wealth of medicinal plants is to cultivate them on farmer's fields. This will not only lead to conservation of valuable species, but will also provide raw materials for the pharmaceutical companies, on a sustained basis.

India is said to be the paradise of medicinal herbs in the world. It has possible agro-climatic zone from the highest of Himalayas down to the sea level of Kanyakumari, from the dry arid desrt of Rajasthan to the wettest plce in North East.

India is the major exporter of medicinal plants and their products. It holds monopoly in periwinkle and Senna, and has prominent position in Ipecac, Nuxvomica and several others. It produces about 865 tonnes of Opium seeds and derivatives. India also dominates the production of Isubgol husks and seeds in the world by exporting 30,000 tonnes of husk every year. Even though our country holds monopoly in this trade, it is not able to meet even 50 per cent requirement of United States alone.

Tamil Nadu is blessed with different agro climatic regions for growing many medicinal plants. Tamil Nadu has vast potential for raising these medicinal plants. The hill ranges viz., the Nilgiris, Kodaikanal, Shevroys, Kolli Hills and other hills are quite favourable besides the dry tracts of Tirunelveli,Ramnad, Salem and Dharmapuri. The cultivation of Tirunelveli Senna and Vinca are under commercial scale in the plains of southern districts. Now in few places of Coimbatore , Periyar and Salem Districs,, Gloriosa superba is grown as a profitable crop requiring less water and minimum care.

One major plus point in medicinal plants is their ability to grow and yield economically under drought, saline and alkaline soils. The crops like Vettiver, Datura., Senna, Medicinal Solanums, Lawsonia, Sweet Basil are recognised to withstand these conditions.

Most of the seeds in the field of commercial crops are very good medicinal plants,. They include Karisilanganni (Eclipta alba), Kuppai Meni (Acalypha indica),Vallarai (Centella asiatica), Kila Nelli(Phyllanthus amara), Amman Pacharisi (Euphorbia hirta), Nayuruvi (Achyranthus aspera), Thumbai (Leucas aspera), Bramma Thandu (Argemone mexicana), Aduthinnampalai (Aristolachia bracteata) and several others. These species can be cultivated in the plains and at moderate hill ranges.

Digitalis is a medicinal plant which can be profitably cultivated in Tamil Nadu hill ranges having an elevatiion of 1000-1500 metres above m.s.l. either as a pure crop or intercrop in plantation crops. To this can be included other species like Piper longum, Diosocrea composita and D. floribunda, solanum khasianum, Rauoclfia serpentine, withania somnifera, Glycyrrhiza glabra and Plantago ovata.

Most of the plants can be grown in Kitchen Gardens, in pots or wooden boxes. Few vine plants like Asthma plants (Tylophora asthmatica), Gloriosa superba, Kodi veliver (Plumbago zeylanica) pirandai (Cissus quadrangularis), Mithi pakal (Momordica cochinsinensis), Cocinia indica, Sugar killer (Gymnema sylvestris), Thuthu Vazhai (solanum trilobatum) Kakkattan (Clitoria ternatea), Mudakkatran (Cardiospermum helicacabum) can be trained in a fence and used for medicinal uses.

In addition to these medicinal plants, there exists vast scope for commercial cultivation of herbal spices like Ajowan (Trachyspermum ammi), Basil (Ocimum basilicum), Bay leaf (Laurus nobilis), Caraway (Carum carvi), Horse radish (Armoracia rusticana), Hyssop (Hyssopus officinalis) Marjoram (Majorana hortensis (syn.Origanum majorana, L), Mint (Mentha arvensis L), Oregano (Origanum vulgare), Parsley (Petroselinum crispum), Pepper Mint (Mentha piperita), Poppy seed (Papavar somniferum), Rose Mary (Rosemarinus officinalis), Sage (Salvia officinalis), Savory (Satureja hortensis L.), Star anise (Illicium verum L.), Tarragon (Artemesia dracunculus L.) Thyme (Thymus vulgaris L.) Dill (Anethum graveolens L.) and Anise (Pimpinella anisum L.).

In India , Ayurveda needs about 1400 plant species for preparation of various medicines. Of the 7500 plant species available in our country under the natural resources, about 500 types are used most commonly in the traditional medicines and about 100 plant species are utilised for allopathy medicines. There are about 7000 licensed indigenous medicine factories and more than 40,000 registered Siddha medical practitioners, in our country. Herbal medicines worth an estimated 250 million US dollars are produced annually in India. It exported crude drugs worth Rs. 129.8 crores during 1993. To sustain the trade, there should be a regular and uniform supply of raw meterials. Presentty, most of the raw material is extracted from its natural habitat. This upsets the ecosystem and also depletes the area under their growth because there is no concerted efforts to regrow the plant materials. Many important plants have become extinct and many more have been listed as endangered as per the red data book of Botanical Survey of India.

Understanding the importance of preserving the essential herbal plants in our country, the Government of India, Ministry of Health and Family Welfare have initiated substantial efforts to grow the rare medicinal plants under different climatic zones of our country. Some of the plants which are having demand in the Indian System of Medicine and Homeopathy and are very scarce in availability have been recommended for commercialisation.

Major constraint for large scale cultivation :

1) Majority of farmers are conservative and are reluctant to shift to the cultivation of medicinal plants.
2) Lack of knowledge of farmers about the trade.
3) Unorganised and narrow marketing channel kept confident by few traders and their exploitation.

4) Lack of scientific agrotechnology for different climatic zones.
5) Lack of facilities for synthesis of alkaloids and chemicals from plant parts on a large scale.

If all these constraints are solved if not to 100 per cent level, there is a bright scope in the near future for the profitable commercialisation in growing medicinal plants in our country. In addition the health of Indians also will improve besides their wealth improvement in exporting large quantity of medicinal plants without any exploitation.

ENDANGERED MEDICINAL PLANTS

Dr. HEMA BALRAM, PROFESSOR AND HEAD OF THE
DEPARTMENT OF BOTANY,
ETHIRAJ COLLEGE FOR WOMEN, MADRAS.

Plants have been used as a source of medicines by all cultures, from the ancient times to the present day. According to surveys conducted by the World Health Organization (WHO) as much as 80% of the world's people depend on traditional medicine for their primary health care needs. Traditional therapy mainly involves the use of plant extracts or their active principles. The use of medicinal plants is not confined to developing countries alone. For example, in the USA in the past two and a half decades, 25% of all prescriptions contained materials from higher plants.

According to Farnsworth and Morris (1976), higher plants are the 'sleeping giant of drug development', a virtually untapped reservoir of potentially useful sources of drugs that will continue serving mankind in the future as they have since the dawn of civilization. This assumption has led to indiscriminate destruction of plant habitats like tropical forests, wetlands, Mediterranean ecosystems and parts of the arid zone. Today, many medicinal plants face extinction or severe genetic loss. about 50% of tropical forests, the treasure house of plant and animal diversity, has already been destroyed and the rest may not withstand the onslaught of man even for a decade. Human interference has been mainly responsible for depletion of plant resources.

The IUCN Red Data Book defines endangered species as "Taxa in danger of extinction and whose survival is unlikely if the causal factors continue operating "________________" included are taxa whose numbers have been so drastically reduced that they are deemed to be in immediate danger of extinction". According to the Threatened Plants Committee of the IUCN, about 10% of the world's flowering plants are reported to be "dangerously rare" or "under threat". Norman Myers, a noted conservationist, concludes that at least one species is disappearing each day in the tropical forests alone. Peter H.Raven observes that "a disappearing plant can take with it 10 to 30 dependent species such as insects, higher animals and even other plants".

For most countries including India, there is no complete inventory of medicinal plants. Much of the knowledge is held by traditional societies, whose very existence is now under threat, and very little of the information has been recorded in a systematic manner. Plants hold an inexhaustible reservoir for the possible identification and isolation of useful chemical compounds for syndromes such as AIDS.

The great increase of interest in the use of plants in medicine has been made on the assumption that plants will be available on a continuing basis. Until recent years the term 'wild life' was considered synonymous with 'animal life' and the danger to plant life went unnoticed. Now various leading national and international organisations have initiated studies on the problem of threat to plant species and proposed strategies for their conservation. Such organisations include the WHO, IUCN and WWF.

In any country including India the threat to medicinal plants is greater in areas which are subjected to considerable developmental activities such as forests which lie close to villages and agricultural lands. Indigenous medical practitioners in towns and cities also cannot themselves collect the plant materials and have become prescription writers, depending upon drugs supplied by bulk collectors or traders. The chances of adulteration are also on the increase. Many drugs are valuable foreign exchange earners and the plants are exploited with consequent endangering of the species.

TABLE 1

Name	Suppliers	Consumption per year
Rauvolfia serpentina	Thailand, India Sri Lanka, Burma	11 tons
Digitalis lanata	Europe, India	1000 tons
Cinchona officinalis	India, Africa S.America	500-1000 tons of bark
Glycyrrhiza glabra	Europe, W.Asia USSR, China	500 tons in Europe alone
Panax ginseng	China, USSR, Canada, Korea	2000 tons
Cassia angustifolia	S.India, Sudan Egypt	5000-6000 tons
Plantago ovata	India, Guatemala	15000 tons
Dioscorea floribunda	China, India	800 tons

REF: SIVARAJAN, V.V. AND BALACHANDRAN I. (1994)

DEVELOPING A STRATEGY

No single sector, private or public, can undertake the conservation of medicinal plants alone. The job requires a team effort, involving a wide range of disciplines and institutions. It is essential that regional and national workshops be held, bringing together experts in different aspects of the subject to assess the situation, define objectives, set priorities and draw up a plan of action. In developing and implementing a strategy, it is essential that all people who use medicinal plants - herbalists, plant collectors, health workers and local people should work in partnership.

THE EXPERTS MOST NEEDED FOR A PROGRAMME OF CONSERVATION AND SUSTAINABLE UTILIZATION OF MEDICINAL PLANTS

Agronomists	To improve techniques for cultivating medicinal plants
Conservation Campaigners	To persuade the public of the need to conserve medicinal plants
Ecologists	To understand the ecosystems in which medicinal plants grow
Ethnobotanists	To identify the use of plants as medicines in traditional societies
Health Policy-makers	To include conservation and utilization of medicinal plants in their policy and planning
Horticulturists	To cultivate the medicinal plants
Legal Experts	To develop effective legal mechanisms that ensure that collection of medicinal plants is at levels that are sustainable
Park Managers	To conserve medicinal plants within their parks and reserves
Park Planners	To ensure that park and reserve systems contain the maximum diversity of medicinal plants
Pharmacognosists	To study the application of medicinal plants
Plant Breeders	To breed improved strains of medicinal plants for cultivation
Plant Genetic Resource Specialists	To assess and map the genetic variation in medicinal plants and maintain seed banks of medicinal plants
Plant Pathologists	To protect the cultivated medicinal plants from pests and diseases without using dangerous chemicals
Religious Leaders	To promote a respect for nature
Resource economists	To evaluate the patterns of use and the economic values of medicinal plants

Seed Biologists	To understand the germination and storage requirements of the seed of different medicinal plants
Taxonomists	To identify the medicinal plants accurately
Traditional Health Practitioners	To provide information on the uses and availability of medicinal plants

BASIC STUDIES

1. TO STUDY TRADITIONAL KNOWLEDGE ON THE USE OF PLANTS IN HEALTH CARE

1.1. Each country should identify and support one or more institutions to plan, co-ordinate and implement ethnobotanical surveys. Teams should be multi-disciplinary and should include traditional practitioners.

1.2. The selected institutions should implement a nation wide programme of surveys on the use of plants for medicinal purposes in traditional societies.

1.3. The Ministry of Health should incorporate proven traditional remedies into National Programmes of Primary Health Care.

A CHECKLIST OF REQUIREMENTS FOR AN ETHNOBOTANICAL SURVEY

The researcher should:

